# நாடார் மகாஜன சங்கம்

## 12-வது மகா நாடு
## அருப்புக்கோட்டை.



1928ஹ ஜூலை மீ 4, 5, 6உகளுக்கு விபவஹ ஆனி மீ 21, 22, 23உகளில்
இதற்கென விசித்திரமா யமைத்திருக்கும்
"பாண்டிய விலாஸ்" கொட்டகையில் நடைபெறும்.

குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான கனம். டாக்டர்.

**P. சுப்பராயன் M.A., B.C.L., L.L.D. அவர்கள்**

மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

பொறையார், ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள்—
பிரஸிடெண்ட்.


# வழக்கம்.

பிரபஞ்சத்தில் அகப்பேய், ஆசைப்பேய், பணப்பேய், த்வேஷப்பேய், ஜாதிப்பேய், பொறாமைப்பேய் முதலிய பல பேய்களோடு வழக்கமெனும் பேயுமொன்று. தற்காலத்தில் வழக்கப்பேய்க்கும் அக்கிரயோக உச்சஸ்தானத்தில் இருக்கிறது. வழக்கமெனும் முழக்கம் செவிடுபடுகிறது. நியாயமோ அநியாயமோ—நன்மையோ தின்மையோ வழக்கமெனும் குருட்டு நம்பிக்கை இழுத்தேகுகிறது.

பொதுவாகப் பலரிடத்திலும் சிறப்பாக ஸ்திரீகளிடத்திலும் வழக்கமெனும் கொள்கை வலுத்திருக்கிறது.

உலகத்தில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலத்தில் யோகமும், சோகமும் மாறி மாறித் தோற்றுவதியற்கை. இதை அனுசரித்தே "யானைக்கோர் காலம் வந்தால் பூனைக்கோர் காலம் வரும்" என்றொரு மொழி பண்டையில் உண்டாகியிருக்கிறது. பல காரணங்களினால் வழக்கம் என்பதற்கு பொதுவாகச் செல்வாக்கிருந்தாலும் அநீத வழக்க பழக்கங்களுக்குச் சாவு மணியடிக்கும் காலம் சமீபத்திலிருக்கிறது.

ஒருவன் இன்னுமொரு ஊருக்குக் காடு முரடான முட் பாதையிலேகி வந்தானென வைத்துக்கொள்ளுவோம். ஒருநாள் வேறொருவன் அவ்வூருக்கவனை ஒரு ராஜபாட்டை வழி அழைத்தேகினனெனவும் வைத்துக்கொள்வோம். முதல்வன் வழக்கம் வழக்கமென முதலில் சென்றவழி செல்வானா? அல்லது ராஜபாட்டை வழி நடப்பானா? காடு முரடான வழி செல்லலில் நலமா? அல்லது ராஜபாட்டை வழியேகுதல்சிறப்பா? என்பதை வழக்கமெனக்கூறித் திரிவோரே கூறட்டும். முதலில் சென்றவழி தீயவழி; இரண்டாவது சென்றவழி நயவழியெனக் கொள்க. நிற்க,

வழக்கமாய்ச் சென்ற படிதான் செல்லல் வேண்டுமென்பதற்கு விதி கிடையாது. தீமையோ தூய்மையோ கண்ணை மூடிக்கொண்டு பகுத்தறியாமல் வழக்கத்தின் வாலைப்பற்றிக்கொண்டு பின்னேகுதல் அறிஞர் செயலல்ல. காலத்திற்கேற்றவாறு மாற்றங்கொள்ளாமல் சென்ற வழியே தான் செல்லல் வேண்டுமென்றால் பகுத்தறிவு நமக்கவசியமில்லையே. அவசியமில்லாவொன்றை அமலன் நமக்கிதுவரை அளித்ததில்லையே. நன்மை தீமை அறிந்து நன்மை கடைப்பிடித்து இன்பமடையவே இறைவனால் நமக்கு பகுத்தறிவு பரிசளிக்கப்பட்டிருக்கிறது. பகுத்தறிவு கொடுக்கப்பட்டிருந்தும் அதை உபயோகித்து சுகமடையாதிருப்பதெத்துணை தப்பிதம்! ஒரு காரியத்தை அறியாமையாலும், சுயநலம் கருதியும்ஒரு காலத்தில்ஒருசிலர்வழக்கத்தில்புகுத்திவிட்டிருக்கலாம். அதைப்பின்பற்றி ஆட்டுமந்தைபோல் ஒருவரைப் பார்த்தொருவர் செல்வது பகுத்தறிவுக்குப் புறம்பாகும். நெற்களில் கற்களும் கலந்து கிடப்பதுபோல நமது சமயங்களிலும் குறைகள் மலிந்தே கிடக்கின்றன. அவைகளின் பின் கண் மூடிக்கொண்டு பின்னேகிவிடாமல், பகுத்தறிவுகொண்டு அவைகளிலுள்ள நன்மைகளைக் கைக்கொண்டு தீமைகளை உமிழ்ந்து விடுவதே ஒவ்வொரு மனிதனுடைய முக்கியமான கடமை.

"பழையன கழிதலும்புதியன புகுதலும், வழுவல கால வகையினான" என்ற மெய்நீதி கண்டு தெளிதற்பாற்று.

நன்மை பயக்கக்கூடிய வழக்க வழியில் செல்வதை ஆக்ஷேபிப்பவர்கள் அறிஞர்களல்ல. வழக்கமெனும் போலிச் சாக்கை ஏற்படுத்திக்கொண்டு நியநெறியேகுதலைக் கண்டிப்பவர் அறிவுற்றவரல்ல.

வழக்கமெனும் போலி வேடம் பூண்டு சுவாமிகளின் பேராலும் சமயங்களின் பேராலும் அநீதி செய்பவர்களை துன்பங்களும் துக்கங்களும் சொந்தம் பாராட்டுமென்பது மிகையாகா.

எங்கு உண்மையும், அன்பும், நன்மையுமற்ற வழக்கமிருக்கிறதோ அவ்வழக்கத்தை வேரறக்களைவதே உத்தமர்க்கழகு. நீதியும் நியாயமும் இறைவனின் சட்டமே தவிர வழக்கம் ஈசனின் விதியாகா.

பொட்டுக்கட்டும் வழக்கத்தையும், திருக்கோயில்களின் முன் பலியிடும் வழக்கத்தையும், விதவா விவாகம் செய்யாதிருக்கும் வழக்கத்தையும், பால்ய விவாக வழக்கத்தையும், பிராமணர்களுக்கு அடிமையாயிருக்கும் வழக்கத்தையும், வரதக்ஷிணையெனும்கொடிய பிணியாகிய வழக்கத்தையும் அறவே ஒழித்த அன்றே நம் நாடு சுயாக்ஷியடையப் பக்குவமான காலம். நம்பாரத நாடு வழக்கமெனும் பகைவனால் வஞ்சிக்கப்பட்டு பின்னேற்றமடைந்து சிறிய தேசத்தார்க்கு அடிமையாயுமிருக்கிறது.

எப்படிப்பட்டவராயினும் சரியே நீதியும் அன்புமற்ற வழியைக்கூறின் அதை எவரும் லக்ஷியம் செய்யவேண்டிய அவசியமேயில்லை.

இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் தொழில்களையா நம் முன்னோர்கள் செய்துகொண்டிருந்தார்கள்? வழக்கமென்போர் நம் முன்னோர் தொழிலைக்கைக்கொண்டிருக்கிறார்களா? வழக்கமெனப் பிதாவைப்போல் பின்னையும் கற்காதிருப்பது எத்துணை தீமை! தீய வழக்கம் தீமையின் அவதாரம். பிதா குடிகாரனாயும், விபசாரப்பிரியனாயுமிருந்தால் அவன் புத்திரன் இச்செய்கைகள் எங்கள் குடும்ப வழக்கமெனக் கொள்ளுதல் நியாயநெறியாமா? உண்மை உலகம் இதை ஏற்குமா? கடவுள் கருணைபுரிவாரா? சிந்தித்துத் தெளிமின். உண்மையை ஒத்துக்கொள்ளுதலே உயர்ந்தோர் கடமை. பிடிவாதம் செய்தல் சிறியோர் ஸ்தானத்திலிருத்திவிடும். சத்தியத்தில் வைராக்கியம் கொள்ள வேண்டியதே மக்கள் கடமை.

நல் வழக்கம் நற்றுணை. நல்வழக்கமே நல்வாழ்க்கைக்கு நலந்தரும். சமரச ஐக்கிய சுதந்திர வாழ்க்கைக்காக ஏற்பட்ட அன்பை அஸ்திவாரமாகக் கொண்ட நம் உண்மை மதம், சில சுயநலப் போலிகளினால் பல தீய வழக்கங்களை அகத்தில் கொண்டுவிட்டது. மெய்க்கல்வியெனும் ஞான சூரியன் எவ்வளவுக்கெவ்வளவுஒளிபரப்புகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஆண்களிடத்தில் மாத்திரமல்ல பெண்களிடத்திலுமுள்ள குருட்டு நம்பிக்கைகளும், மூடக் கொள்கைகளும் விலகிவிடும். சுயநலப்புலிகளிடம் அடிமையாயிருக்கும் பிணிக்கு சுயமரியாதை மருந்தருந்தி, மானத்தைக் காப்பாற்றி நாமும் பிறரைப்போல் ஆண்மையுள்ள மனிதர்கள் என்ற பூரண நம்பிக்கையோடு வாழ்வோமாக.

சுபம்!

அ. கு. அண்ணாமலை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஜீவகாருண்யம்.

இப்பிரபஞ்சத்தில் ஓர் பாகமாகிய நமது பாரதபூமியில், எங்குமே ஜீவகாருண்ய சங்கங்கள் புண்ணிய ஆத்துமாக்களால் ஸ்தாபனம் பண்ணப்பட்டு "கொல்லாமை" என்பதைக்கையாண்டு கோயில்களில் பலியிடுவதை நிறுத்துவதற்காக முயற்சி செய்து வருகின்றனர். அன்னாரின் பிரயத்தனம் வியர்த்தமாய் போய்விடாது பலகிராமங்களில் பலி செய்வதை நிறுத்தி வெற்றி பெற்றுவருவது மிகவும் புகழத்தக்கதே. எம்பிரான் அவர்கள் பால் நீடிய ஆயுளும் சகல சம்பத்தும் அருள் வாராக.

இது நிற்க, ஜீவகாருண்ய விஷயமாய் சிலவற்றை எழுதுவது கடமையென இங்கு வரையலானேன். அதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். சாதாரணமாக எந்த ஜில்லாவை எடுத்துக்கொண்டாலும் சைவர்கள் கொஞ்சம்; அசைவர்கள் மிகுதியென்பதை சொல்லத் தேவையில்லை. "புத்தமதம், ஜைனமதம், கிறிஸ்துமதம் முதலியவைகள் பக்ஷிகளையும் மிருகங்களையும் கொலை செய்யுங்கள் என்று சொல்லவில்லை. ஜனங்கள் தான் தங்களிஷ்டப்படி மொழிபெயர்த்து விபரீத அர்த்தம் உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். மிருகங்களைப் பலி செய்வதனால் படுக்கையில் சுகவீனமாய் இருக்கும் ஒருவன் சொஸ்தமடையலாம் என்று இந்த சாஸ்திரங்களில்கூறவில்லை" என்பது அச்சங்கத்தாரின் கொள்கை. அதுவும்வாஸ்தவமே. தர்மத்தை தழுவி நின்றவர்கள் அதற்கு விரோதமான கொள்கைகளைக் கையாளக்கூடாது. அப்படி மீறிக் கையாளுவதனால் பாவத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதும் எவரும் எளிதில் அறியக்கூடியது; ஒப்புக்கொள்ளகூடியது. ஆனால் மிகுதியான பேர்வழிகள் மாமிச பக்ஷணிகளாக இருந்துவருகிறபடியால் கவர்ன்மெண்டாரும் அதன் விஷயமாய்க் கட்டாயப்படுத்தி நிறுத்தமுடியாதிருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரையும் குற்றம் சொல்லமுடியாது. ஜீவகாருண்ய சங்கத்தாரின் சியரல உழைப்புத் தான் பயனை விளைவிக்கும் என்பது கவனிக்கத்தக்கது.

புலால் உண்பது பாவம் என்று அறிந்துகொள்ளப் போதுமான அறிவு இல்லாமையாலோ அல்லது பழக்கத்தை நிறுத்த முடியாததாலோ விதண்டாவாதிகள் மூலைக்கு மூலை நிறைந்திருக்கிறார்கள். மிருகங்களையும், பக்ஷிகளையும் அடித்து தின்னுவிட்டால் அஜ்ஜெந்துக்கள் நிறைந்து போய்விடும்; ஆடு முதலிய ஜீவபிராணிகளை வளர்ப்பதனால் கஷ்டம் ஏற்படும்; இருபது நபர்கள்கூடி ஓர்கடாவை அறுத்துச்சாப்பிடுகிறோம்; ஆனால்ஒருவயலுக்காக எவ்வளவோ பூண்டு, குழைகளையும்வெட்டி உரமாகப்போடுகிறார்கள்; அது நாங்கள் செய்யும் பாவத்தைவிட எத்தனையோ மடங்கு அதிகம்; பாலைக்குடிப்பதனால் இரத்தத்தைக்குடிப்பதற்குச்சமம்என்று விதண்டாவாதம் பேசி வருகிறார்கள். மச்ச மாமிசத்தை ஜென்மமெடுத்தது முதல் இதுகாறும் பக்ஷணம் பண்ணி வருகிறோம்; அவ்வழக்கத்தை நிறுத்த எப்படி சாத்தியப்படும் ? என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் மாமிச பக்ஷணியாகிய சிங்கமும், முதலையும் சாக பக்ஷணியும் பெரிதுமான குஞ்சரத்தைக் கொன்று கிடுகிறது; அதனால் மாமிச பக்ஷணிகளே பல முடையன; காய் கறிகள் சாப்பிடுவதால் தேகம் பருத்துச் சோம்பிப் பலங்கெட்டுப் போகிறதென்கிறார்கள். இன்னும் மாமிசம் தின்னும்சில மேதாவிகள் ஆட்டுக் கண்ணைத் தின்றால் கண் நன்றாய்த் தெரியும் என்றும், கால் சூப்புவைத்துச் சாப்பிட்டால் கால்களுக்கு பலம் என்றும்; படைப்பு எல்லாம் மனிதருக்காக படைத்தது; அப்படைப்புக்குள் மிருகங்களும் பக்ஷிகளும் சேர்ந்தனவென்றும் சொல்லுகிறார்கள். வேறு சிலர் குளிர் தேசத்தில் மிருகங்களையும், மச்சங்களையும் தவிர ஒன்றும்கிடைக்காது; காய் கறிகளகப்படாமல் பிராணன் போவதைவிட மாமிசம் புசிப்பதே சிறந்த உபாயம் என்றும், சில பட்டிகளில் காய்கறி கிடைப்பது அரிது; வாங்கினாலும் விலையதிகம்; ஏழைகளாக இருக்கிறவர்கள் எப்படிக் காய்கறிகள் வாங்குவது ! அதிக சிரமமில்லாமல் அருகிலுள்ள குளம், ஏரிகளில் போய் மச்சத்தைப் பிடித்து உபயோகித்துக் கொள்ளலாம் என்றும், காய்கறிசமைப்பதற்கு நேரம் அதிகமாகிறது என்றும், திடீரென்று மச்ச மாமிசங்களை நிறுத்தினால் தேகத்திற்கு அசௌக்கியம் ஏற்படுகிறதென்றும் பலவாறு சாக்குப் போக்குகள் சொல்லா நிற்பர். இக்கூற்றெல்லாம் இறைவன் தன்மை யுணர்ந்து அவனையடையும் மனிதர்கள் கூறுவதா என்பதை யூகியுங்கள்.

அன்பர்களே ! மச்சத்தைப் பிடிக்கும் நேரத்தில் மகாத்மா காந்தியடிகள் வற்புறுத்திச் சொல்லும் கதர் நூல் நூற்றலையாவது அல்லது அவர் அவர் சக்திக்கேற்பவேறுசிறுதொழிலையாவது செய்து அதனால் வரும் உத்தமக் காசு கொண்டுபரிசுத்தக் காய்கறிகள் வாங்கிச் சாப்பிடலாம். அல்லது காய்கறிகளைத் தாங்களே தோட்டத்தில் போட்டு பயிர் செய்து கொள்ளலாம். அதிக நேரம் சமைப்பதற்கு ஆகிறதென்றால் இரண்டு அடுப்புகளை வைத்துக்கொண்டால் சீக்கிரம் ஆய்விடும். இதற்கெல்லாம் சோம்புவதென்றால் இழுக்கன்றோ ? செலவு அதிகமேயென்றால் செட்டுமைத்தனமாய் செலவு செய்யின் செலவு கொஞ்சமே யென்கிறேன். புண்ணிய காரியத்திற்கு ஒரு சிறிது செலவு செய்தால்தான் என்ன ? இறைவனருள் பெரிதா ? அல்லது பாவம் செய்து பணம் மீதப்படுத்துவது பெரிதா ? எனக் கேட்கிறேன். பால், தயிர், நெய், பருப்பு, வாதுமை, கொட்டை, வாற்கோதுமை, உழுந்து முதலியவைகளை அதிகமாகச் சேர்த்துவரின் பலம் அதிகப்பட ஏதுவுண்டு. நல்வழியில் நடந்து பிரகிருதிக்கு விரோதமான செய்கைகள் பழக்கத்தில் இல்லாத ஒருவருக்கு மாமிசத்தை நிறுத்துவதனால் பலம் குறையும் என்பது ஒப்புக்கொள்ள முடியாது. பத்துத் தடவைகள் ஆடு கோழிகளை வெட்டும்போதுபார்த்தவச்சகித்திருந்தவர்களுக்கு பதினோராவது தடவை வெட்டும்பொழுது ஓர் ஜீவபிராணியை வதை செய்கிறோமே என்று கொஞ்சம்கூட சிந்தனை வரவே வராது. பல தடவைகள் கொலையைப் பார்த்துப் பார்த்து மனம் இருகி விடுகிறது. கசாப்புக் கடைக்காரர்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான உருப்படிகள் விலை செய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு பெருமை பாராட்டிக்கொள்வது சகஜம் ஐயோ ! தவர்கள் உருவே கொலைப் பாவம் தய்த்துப் போனது போலும். இவ்விஷயத்தில் தற்காலம் அபிப்பிராய பேதங்களும், நடத்தைகளும் தாறுமாறுக ஆகிவிட்டன.

ஜீவகாருண்ய தொண்டர்காள்! மாமிசம் புசிப்பதைநிறுத்தப்பிரசாரம்செய்துவருதலோடு, காய் கறிகளின் ருசியுணர்த்தல் பிரசாரமும் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறுகிறேன். அப்போது தான் மாமிசம் மறக்கப்படும் என்பதுறுதி. பல தினுசு பதார்த்தங்கள் செய்யவும், ருசியான பக்ஷணங்கள் உண்டுபண்ணவும் சமையல் வேலை பார்ப்பவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நளபாக பீமபாக சாஸ்திரங்களில் சமையல் வேலையைப்பற்றிப் பரக்க காணலாம். அநேக விதமான சமையல் பாகங்கள் இருப்பதால் சுறுக்கில் கற்றுக்கொள்ள முடியாது. ஆகையால் பெண் பாடசாலைகளில் இப்புஸ்தகங்களைக் கற்பித்துக் கொடுக்கும்படி பிரயத்தனம் செய்வது மிகவும் அவசியம்.

அநுபோகத்தில் பார்க்கக்கூடிய விஷயம் ஒன்று. நன்றாய்க் காய்கறி சமைக்கத் தெரிந்த குடும்பங்களில் வாரத்தில் ஒருமுறை யல்லது இரு முறைக்குமேல் மாமிசம் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். மாமிசம் இல்லையானால் தேயிலைத் தண்ணீர்கடைகளில் போய், திருவிளையாடல்கள் பண்ணும் நண்பர்களும், காய் கறி ருசியை தெரிந்தால் அடிக்கடி மாமிசம் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தையாகிலும் நிறுத்துவார்கள். கொஞ்ச நாள் போகப்போக மாமிசத்தை வெறுத்து சுத்த சைவர்களாகி விடுவார்களென்பது யூகிக்கத்தக்கது. அன்பர்களே ! கொன்று தின்பதை யொழித்து சத்துணவை யுட்கொண்டு மேலாம் பதமடையப் பிரயத்தனப் படுவீர்களாகவும்.

கா. சு. தங்கநாடார், ரங்கூன்.

## பார்ப்பன ரல்லா இளைஞர் மகாநாடு, மதுரை.

### தீர்மானங்கள்.

(முன் தொடர்பு.)

36. வகுப்புவாரிப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குச் சர்க்காரின் சகல உத்தியோக சாலைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் மதலில் உத்தியோகம் கொடுத்து ஆதரிக்குமாறு இம்மகாநாடு வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்கு குடியிருப்பு, மனைவசதி, ஜலவசதி, தர்க்காஸ்து நிலம் முதலியவைகளைக் கூடுமானவரையில் கிடைக்கும்படி செய்ய இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

37. (ஏ) புராண சம்பந்தமுள்ளனவும், குருட்டு நம்பிக்கையும், மூடப்பழக்க வழக்கங்களைக் கொண்டனவும் மக்களுள் வகுப்புக்கு வகுப்பு வேற்றுமைகளைக் கற்பிப்பனவுமான நாடகங்களை நிறுத்திவிட்டு மக்களுள் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் உண்டாக்கத்தக்கதான சமூக சீர்திருத்த சம்பந்தமான நாடகத்தை நடத்தி மக்களுக்கு விடுதலை அளிக்கச் செய்யவேணுமாய் நாடக ஆசிரியர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(பி) திருச்சி சுயமரியாதைச் சங்கத்தார் இக்கொள்கையை அனுசரித்து சுயமரியாதை அல்லது மூன்று நண்பர்கள் என்ற நாடகத்தை நடத்தி வருவதற்காக இம்மகாநாடு நன்றி செலுத்துவதுடன் இதற்கு வேண்டிய முயற்சி எடுத்து வரும் திரு. விஸ்வநாதபிள்ளை அவர்களுக்கும் இம்மகாநாடு நன்றி செலுத்துகிறது.

38. மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் பிராமணர்களுக் கென அறைகள் தனியாக ஒதுக்கப்பட்டிருப்பதை இம் மகாநாடு கண்டித்து அதில் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளும்படியாக மதுரை ஜில்லாப் போர்டு தலைவரவர்களை இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

39. சுயமரியாதை இயக்கம் தோன்றி ஏறக்குறைய மூன்று வருஷங்களாயினும் அநேக சங்கங்கள் ஏற்பட்டிருப்பினும் அவைகளையெல்லாம் ஒன்று கூட்டுவதற்காகவும் இச்சுயமரியாதை இயக்கம் இன்னும் தீவிரமான முன்னேற்றத்திற்கான வழிகளில் வேலை செய்யவும் சுயமரியாதை மாகாண மகாநாடு ஒன்றைக் கூடிய விரைவில் கூட்ட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

---

வாலிப நாடார்

3-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

1928-௵ ஜூலை ௴ 5வ்க்கு
விபவ ௵ ஆனி ௴ 22வ்யில் நடைபெறும்.

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர், திரு.
வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்
அக்கிராசனம் வகிப்பார்கள்.

---

## திருநெல்வேலி டவுண் சுற்றுக் கிராமங்களிலுள்ள நாடார்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நாடார் குல கனதனவான்களே !

நமது நாடார் மகாஜன சங்கம் மதுரையில் ஸ்தாபிதமாகி சுமார் 18 வருஷங்களாகி யிருக்கின்றன. அதன் பயனாய் விருதுநகர், அருப்புக்கோட்டை, சிவகாசி, கமுதி, மதுரை, சாத்தூர், திருமங்கலம் முதலிய இடங்களிலுள்ள நம்மவர்கள் கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்து அவ்வப்போது கூட்டங்கள் கூட்டி தங்களுக்கு வேண்டுங் காரியங்களைத் தாங்களே சீர் திருத்தம் செய்து கொள்கிறார்கள். அப்படிச் செய்வதினால் அவர்கள் முன்னேற்றம் அடைந்துகொண்டு வருகிறார்கள். அவர்களின் முயற்சியினால்தான் நாம் இவ்வளவு நிலைமைக்கு வந்திருக்கிறோம் என்பது உறுதி. திருநெல்வேலி டவுணுக்குச் சுற்றுப் புறங்களிலுள்ளவர்களாகிய நம்மைப்போல் அவர்களும் கும்பகர்ணன் தூக்கத்திலிருந்திருப்பார்களானால் நம்மை இதர வகுப்புத் துவேஷிகள் பாதாளத்திலழுத்தி இருப்பார்கள். திருநெல்வேலி டவுணுக்குச் சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களில் வசிக்கும் நாடார்களை இன்னமும் இம் சித்துக் கொண்டு வருகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் நாடார்கள் வசிக்கும் முக்கிய நகரங்களாகிய முக்கூடல், சாத்தான் குளம் ஆகிய வற்றில் சுமார் 5 வருஷங்களுக்கு முன்னால் நாடார் மகாஜன கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். தற்சமயம் ஷெ கிளைச் சங்கங்கள் இரண்டும் எங்கு தான் போயிருக்கின்றனவோ தெரியவில்லை. அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்க அவ்வூர் நாடார் பிரமுகர்களை வேண்டிக் கொள்கிறேன். திருநெல்வேலி டவுணும் அதன் சுற்றுக்கிராமங்களிலுள்ள தச்சநல்லூர், கரையிருப்பு, தாழாபுரம், அழகநேரி, பிராயங்குளம், பங்களாப்பற்று மேல்கரை, பழைய கிராமம், சேர்ந்தமங்கலம், சிந்து பூந்துறை, மீனாக்ஷிபுரம், வண்ணார் பேட்டை, குன்னத்தூர், கருப்பந்துறை, சங்குமுத்தம்மாள்புரம் ஆகிய ஊர்கள் ஒன்றுக்கொன்று ஜாஸ்தி தூரமில்லாமலும் ஒரு மைலுக்கு மேல் இரண்டு மைல்களுக்கு அதிகப்படாமலு மிருக்கிறபடியால், மேற்கண்ட 15 ஊர் நாடார் குல தனவான்கள் எல்லாரும் சேர்ந்து சங்கம் ஒன்று ஸ்தாபித்து வேண்டிய நடபடிக்கைகள் செய்வார்களென்று எதிர் பார்க்கிறேன். ஆனால் சங்கம் ஸ்தாபிக்கும் விஷயமாய் ஏதாவது சமாசாரம் தெரிய வேண்டியிருந்தால் திருநெல்வேலி முனிஸிபல் கௌன் சிலரும், திருநெல் வேலி ஜங்ஷன் பிரபல மரவியாபாரியும், திருநெல்வேலி ஜில்லா கல்விச் சபை அங்கத்தினரும், நாடார் மகாஜன சங்க கௌன்சில் மெம்பருமான ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார் அவர்கள்1, பாளையங்கோட்டை வக்கீல் ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் பி. ஏ., பி. யல்., யம். யல். ஸி. அவர்கள் 2 ஆக இரண்டுபேர்களிடமும் கலந்துகொண்டு ஷெ சங்கம் ஸ்தாபிக்கும் வழியைத் தெரிந்துகொண்டு மேற்கண்ட 15 ஊர்களிலுள்ளவர்களும் உடனே சங்கம் ஸ்தாபிக்கும் வேலையை வெகு துரிதமாக நடத்தும்படி வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். நாடார் மகாஜன சங்கம் பற்றிய விபரம் அவர்களுக்குத் தெரியாததால் நமது 12-வது மகாநாட்டுக்கு டிக்கட்டு விற்கவருகிறவர்களும், மகாஜன சங்கம் பிரசாரகர்களும் இவ்வூர்களுக்கு விஜயம் செய்து அவர்களுக்கு விழிப்புண்டாக்கி சங்க ஸ்தாபனத்திற் கேற் பாடுகள் செய்து அருப்புக்கோட்டை மகாநாட்டுக்கு அழைத்து வந்தால் மகாநாட்டைக் கண்ணாரக் கண்டு இனிமேல் நடக்கும் ஒவ்வொரு மகாநாட்டுக்கும் விஜயம் செய்யாமலிருக்க மாட்டார்கள். ஆகையால் இவ்விஷயத்தை 12-வது மகாநாட்டு உபசரணைக்கமிட்டியாரும், மகாஜன சங்கக் காரியதரிசிகளும் கவனித்தால் நிரம்பவும் நலமாயிருக்கும்.

எஸ். ஹரிஹரபுத்திரநாடார்,
தச்சநல்லூர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



காசீ தலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருளுவத் தன்மை நாம
செழுங்கதிர் போல் போக்கு மேவிவிட
நிறை நீக்கிய சீக்கிய செய்யுஞ்
சோதிமை மாந்தா வெளியமைதவிழ
நிலைதுரிய வாழ்வைத்
நீதிப்பெரும் போதனைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

# நாடார்குலமித்திரன்

விபவ ஞு வைகாசி மீ உ௯௨

---

## பர்மா நாடார்களும்,

## நமது மகாநாடும்.

பர்மாவில் நாடார் பெரு மக்கள் வெகு காலத்திற்கு முன்பே குடியேறி இருக்கிறார்கள். ஸ்திரமாய் வசிக்கக் கூடியவர்கள் அனேக ரிருக்கின்றார்கள். ரங்கூன், மாண்டலே, சிரியம், புரோம், தொவுஞ்சை, தேதேகன் முதலிய முக்கியமான நகரங்களில் பெரிய வர்த்தகர்களும், உத்தியோகஸ்தர்களுமாக அனேக ருண்டு. இவர்கள் பொதுத் தர்ம ஸ்தாபனங்களேற்படுத்துவதிலும், அவைகளுக்கு ஒத்தாசை செய்வதிலும் மிகத் தயாள முடையவர்க ளென்பதை நாம் நேரில் அறிந்திருக்கிறோம். சித்திரைப் பௌர்ணமி தினத்தில் சிறந்த அன்னதானம் ஒன்றை வருடந்தோறும் செய்து வருகின்றார்கள். இவ் வன்னதானத்தின் விசேஷம் ரங்கூனில் ஒரு முக்கிய சம்பவமாக யாவரும் கருதிவருகின்றார்கள். நாடார் மகாஜன இளைஞர் சங்கமும், ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாய்ப் படிக்க வசதிகளும் செய்து வைத்திருந்தார்கள். இவைகளெல்லாம் தற்போது எந் நிலைமையிலிருக்கிறதென்று தெரிய வில்லை.

பர்மாவிலுள்ள நாடார்களில் ஒரு சில முக்கிய ஸ்தர்களாவது நமது ஒவ்வொரு மகாநாட்டுக்கும் விஜயம் செய்திருக்கக் கூடும். சாத்தூரில் நடந்த 7-வது மகாநாட்டில் ரங்கூன் பிரதிநிதிகளாய் விஜயம் செய்திருந்தவர்கள், "இந்தியாவிலிருந்து வெளி நாடு செல்கிறவர்கள் சென்னையில் தங்கிச் செல்வதற்கு ஒரு வசதியான இடம் தயார்ச் செய்ய வேணு" மென்று தீர்மானங் கொண்டு வந்து நிறை வேற்றி, அதன் பிரகாரம் பர்மா நாடார்கள் பண்டிவிருந்து சென்னை—ராயபுரத்தில் கட்டடம் கட்டுவதற்காகக் காலி நிலம் வாங்கப் பட்டிருக்கிறது. தொடர்ந்து அவ் வேலை செய்யாம லிருப்பதற்குக் காரணம் தெரிய வில்லை. பல பொதுக் காரியங்களிலும் வெகு உற்சாகமாகவும், ஊக்கமாகவும் முன்னின்று வேலை செய்யும் பர்மா நாடார் குலாபிமானிகள் அனைவரும் நாடார் மகாஜன சங்கத்திற்கும், மகாநாடுகளுக்கும் மிகுந்த ஆதரவு செய்து வந்திருப்பது போல், இம்முறை அருப்புக்கோட்டையில் நடக்கும் நமது 12-வது மகாநாட்டிற்கும் விஜயம் செய்து சிறப்பிப்பார்க ளென்று நம்புகின்றோம். தற்கால உலகத்தில் நாடார் ஜன சமுகத்தின் பிற்கால வாழ்க்கையும், நோக்கமும் எவ்வாறிருக்க வேண்டு மென்பதை இப்போதே நிர்ணயம் செய்து விட வேண்டு மென்று பல்லோர் கருதுவதாலும், தற்கால நடவடிக்கைகளில் அனேக மாறுதல்கள் அவசியம் உண்டு பண்ணிவிட வேண்டு மென்று பரபரப்புக் கொள்வதாலும் இம் முறை நமது மகாநாட்டுக்கு எல்லோரும் விஜயம் செய்ய வேண்டியது அத்தியாவசியமா யிருப்பதால், ரங்கூனிலிருந்தும் மற்றும் பர்மா தேசப் பல நகரங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் வருவார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

---

## வெளி நாட்டு

## நாடார்கள் உதவி.

இந்தியாவிற்கு வெளி நாடுகளென்று சொல்லப்படும் ஐக்கிய மலாய் நாடுகள், மலாக்கா, சுமத்திரா, டெட்டால் முதலிய நாடுகளில் பெரும்பாலான நாடார்கள் குடியேறி யிருக்கிறார்கள். இவற்றில் ஐக்கிய மலாய் நாடுகளிலுள்ள பினாங்கு, சிங்கப்பூர், ஈப்போ, கோலாலம்பூர் முதலிய விடங்களில் தான் பெருந்திரளான நாடார் குல மக்கள் வசிக்கின்றார்கள். இவர்கள் இந்தியாவிலுள்ள நமது சங்கத்திற்கும், மகாநாடுகளுக்கும் அவசரமாக விஜயம் செய்ய முடியாத வெகு தூர தேசத்தில் வசிக்கின்றார்களாயினும், நமது சங்கத்திற்கும், நமது பத்திரிகைகளுக்கும், மற்றும் எந்தப் பொதுக் காரியங்களுக்கும் அருகி லிருப்பவர்களைப் பார்க்கிலும் அதிகமாகவே ஒத்தாசைகள் செய்து வந்திருக்கின்றார்களென்பது மிகையாகாது.

கோலாலம்பூரிலுள்ள நாடார் குல மக்கள் நாடார்களுக்குப் பொதுவான ஒரு சங்கம் ஸ்தாபித்து வெளி நாடுகளில் குடியேறிய நாடார் குல மக்களுக்கு வேண்டிய உதவி செய்து வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதோர் விஷயமாகும். இவர்களும் அந் நாட்டு மற்றைய நகரவாசிகளும் இம் முறை கூடும் நம் மகாநாட்டுக்கு விஜயம் செய்வார்களாகில், வெகு விசேஷமாயிருக்கு மென்பதை நாம் சொல்ல வேண்டிய தில்லை. ஆகையால் பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ முதலிய விடங்களில் வசிக்கும் நாடார் குலாபிமானிகள் யாவரையும் நமது மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் வண்ணம் வெகு பிரியத்துடன் அழைக்கின்றோம்.

---

## உள்ளூர்ச் செய்திகள்.

### சுயமரியாதைத் திருமணங்கள்.

நமது மாபெரும் தலைவரும், வைக்கம் வீரருமான உயர்திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் தமது சகாக்களான ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளை, கண்ணப்பர், விஸ்வநாத பிள்ளை, அழகர்சாமி நாயுடு, வெட்டையண பிள்ளை முதலானவர்களுடன் இந்நகருக்கு 29-5-28ல் விஜயம் செய்து பெரியதோர் கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியதன் பயனாக, இவ்வூர் பிரபல குடும்பத்தாராகிய ஸ்ரீமான் பெருமாள் நாயுடு அவர்கள் பேரனான உபாத்தியாயர் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கும், ஷையூர் வீரய்யா நாயுடு அவர்கள் குமாரர் குருசாமி நாயுடு அவர்களுக்கும், மதுரை, நரசிம்மலு நாயுடு அவர்கள் சகோதரர் ராமசாமி நாயுடு அவர்களுக்கும் ஆக மூன்று திருமணங்களும் நாளிது வைகாசி மீ 18 உ வைக்கம் வீரரின் வீடும், சுயமரியாதைத் தொண்டருமான போடம்பட்டி, திருவாளர். தி. கருப்பையா பிள்ளையவர்களால் சடங்குகள் நடத்தப்பெற்று பார்ப்பனரொழிந்த சுயமரியாதைத் திருமணங்களாகப் பல முக்கியஸ்தர்களின் முன்னிலையில் சந்தோஷகரமாய் நிறைவெய்தின.

ஃ ஃ ஃ

### புரோகிதமொழிந்த திதி.

இவ்வூர் பிரபல நூல் வியாபாரியும், சுயமரியாதைப் பிரியருமான ஸ்ரீமான் வி. ராஜகோபால் நாயுடவர்கள் தமது தாயாரின் வருஷ சிரார்த்தத்தை இது வரை நடத்தி வந்தது போலல்லாமல், மனப்பூர்ணமாய்ப் பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்து சுயமரியாதைக் கொள்கையோடு இனிது நடத்தி வைத்தார்கள்.

ஃ ஃ ஃ

### பார்ப்பனரல்லா வாலிபர் சங்கம்.

இவ்வூரில் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கமொன்று வைக்கம் வீரர் விஜயம் செய்த தினத்தன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீமான்களான ராஜா—ராமச்சந்திரன் சேர்வை, பி. ஏ., பி. எல். அவர்கள் தலைவராகவும், ஆர். வி. மல்லையா. எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் காரியதரிசியாகவும், ஜி. ஸ்ரீனிவாசலு நாயுடு அவர்கள் பொக்கிஷதாரகவும், ரெகுநாதசிங், ரெங்கசாமி ராஜா, ராஜகோபால் நாயுடு ஆகியவர்கள் கமிட்டி மெம்பர்களாகவும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஃ ஃ ஃ

### பட்டப்பகலில் பணப் பெட்டிக்களவு.

இவ்வூர் நாடார்கள் பெரியகடை வீதியில் எண்ணெய்வியாபாரம் செய்து வரும் ஸ்ரீமான் மு. ரா. முருக நாடார் அவர்கள் கடையில் 9-6-28ல் பகல் சுமார் 4-மணிக்கு யாருமில்லா நேரம் பார்த்து யாரோ புகுந்து பணப் பெட்டியைத் திருடிக்கொண்டு போய் விட்டனர். ரொக்கம் ரூ 600-0-0ம் சுமார் ரூ 400-0-0 பெறுமானமுள்ள நகைகளும், பல தஸ்தா வேஜுகளும் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் அப்பெட்டி மறுநாட்காலையில் ஊருக்குக் கீழ்புறமுள்ள ஓர் ஓடையில் திறந்து கிடக்கக் கண்டார்கள். அதில் தஸ்தாவேஜுகள் மட்டும் கவரப்படாது கிடந்தன. திருடினவர் இன்னாரெனக் காணுவதற்கு மார்க்க மேது மிராதிருக்கிறது.

ஃ ஃ ஃ

### சுகாதார வார வழக்கு தள்ளப்பட்டது.

இவ்வூரில் சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாகத் தொடுக்கப்பட்ட சுகாதாரவார வழக்கு சம்பந்தமாகக் குற்றம் சாட்டப்பட்ட 11 பேரையும் 6-6-28ல் 3-30 மணிக்கு மாஜிஸ்ட்ரேட் விடுதலை செய்து வழக்கைத் தள்ளிவிட்டார். இச்சந்தோஷச் செய்தி நகரமுழுதும் காட்டுத்தீ போல் பரவி விட்டது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதன் பொருட்டு சேறு மாலை 7-மணிக்குப் பெருங்கூட்டமொன்று திரு. எஸ். மல்லய்யா அவர்கள் தலைமையில் கூடியது. அக்கூட்டத்திற்குச் சுமார் ஆயிரம்பேருக்கு அதிகமானவர்கள் வந்திருந்தனர். திருவாளர்கள் கருப்பையாபிள்ளை, சொக்கலிங்கபாண்டிய நாடார் ஆகியவர்கள் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பாராட்டியும், சுயமரியாதை இயக்கத்தை எங்கும் பரவச் செய்ய வேண்டிய அவசியத்தை விளக்கியும் பேசினார்கள். இதன் சம்பந்தமாக இங்கு சுயமரியாதைபற்றி மிகுந்த ஊக்கமும் உற்சாகமு மேற்பட்டிருக்கின்றது.

---

## இந்தியாவுக்குத் தேவையுள்ளது எது?

### ஸ்ரீமதி அன்னி பெஸண்டம்மையார் கருத்து.

மற்ற நாட்டு மக்கள் தங்களுக்கு வேண்டுமென்று விரும்புவன எல்லாம் இந்திய நாட்டுக்கும் வேண்டும். எப்படி ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் சுவாதீனமுடையவர்களா யிருக்கிறார்களோ அது போல இந்தியர்களும் தங்கள் நாட்டில் சுவாதீனமுடையவர்களா யிருக்க விரும்புகிறார்கள். தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் பிரதிநிதிகளால் ஆளப்படவும், தங்கள் இஷ்டப் படி மந்திரிகளை நியமிக்கவும், நீக்கவும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தாங்கள் வைத்துக்கொள்ளவும், தங்களுடைய சொந்த தரைப் படைகளையும் கப்பற்படைகளையும் சம்பள மின்றி வேலைசெய்கிற படைகளையும் வைத்துக்கொள்ளவும், தாங்களே வரியை வசூல் செய்யவும், வரும்படி செலவு திட்டங்களை அமைக்கவும், தங்கள் மக்களுக்குக் கல்வி கற்பிக்கவும், தங்களுடைய நிலங்களுக்கு நீர் பாய்ச்சிக் கொள்ளவும், தங்கள் சொந்தங்களில் வேலை செய்யவும், தங்கள் நாணயங்களை அச்சில் வார்த்துச் செய்யவும், மேலான ஏகாதிபத்ய ராஜாங்கக் கூட்டத்துக்குத் தங்கள் மக்களைப் பிரதிநிதிகளாக அனுப்பி அதன் அதிகாரத்தை ஒப்புக்கொண்டாலும் தங்கள் எல்லைக்குள் ராஜீக சுதந்திரமுள்ள நாட்டு மக்களாக இருக்கவும் இந்திய மக்கள் விரும்பி உரிமை பாராட்டுகிறார்கள். எந்த மனிதனும் தன்னுடைய நாட்டிற்குள் அடைய விரும்புகிற எதையும் இந்தியன் அடையக்கூடாது என்பதற்கு யாதொரு நீதியுமில்லை.

இது ஒரு பெரிய உரிமை என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?

ஆங்கிலேயர்கள் இங்கிலாந்து நாட்டில் இதை விடக் குறைவாய் விரும்புகிறார்களா?

ஒரு ஆங்கிலேயர் தன்னுடையநாட்டில் இதை விரும்புகிறார் என்றால் ஏன் ஒரு இந்தியர் தன்னுடைய இந்திய நாட்டில் அதனையே விரும்புவதில் என்ன விநோதம் இருக்கிறது? ஒரு இந்தியர் மாத்திரம் தன்னுடைய நாட்டில் அடிமையாயிருந்து திருப்தி அடையும்படியாய் ஒரு ஆங்கிலேயருக்கும் ஒரு இந்தியருக்கும் மனித சுபாவதில் என்ன பெரிய வேறுபாடு இருக்கின்றது? இருவர்களையும் ஒப்ப நினைப்பதற்கு நோக்கம் மாறுதல் அடைய வேண்டியதில்லை. பெருமிதத்திலிருந்தும் தன்னலப்பற்றிலிருந்தும் நீங்கின கண் பார்வையினால் ஆங்கிலேயருடைய மனித சுபாவமும் ஒன்று தான் என்று தெளிவாய்ப் பார்க்கலாம். இருதயமும் கருவமில்லாமல் ஆரோக்கிய மான தடியாட்ட முள்ளதா யிருத்தல் வேண்டும்.

இங்கிலாந்தும் இந்தியாவும் உலக நலத்தின் பொருட்டுச் சகோதர நட்புடன் வாழவேண்டு மென்பது எமது நம்பிக்கை. அப்படி யாகிறதற்கு இப்பொழுதுள்ள மேல் கீழ் என்ற வேற்றுமைக்குப் பதிலாக நடு நிலைமை உண்டாதல் வேண்டும். ஏனென்றால் இந்தியா, தான் சுவாதீன மடைந்தாலொழிய அமைதியா யிருக்க முடியாது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பணத்தை என் செய்வது?

### நமது 12-வது மகாநாட்டில் தீர்மானம் செய்யுங்கள்.

சமீபத்தில் அருப்புக்கோட்டையில் கூட இருக்கும் நம் 12-வது மகாநாட்டில் அடியில் கண்ட தீர்மானம் கொண்டுவர இருக்கிறோம். இத் தீர்மானம் அவசியமும் முக்கியமுமானது. நம்மவர்களில் படியாதவர்கள் எவருமில்லை என்ற நிலைமையில் வந்தால்தான் நாம் முன்னேற்றமடைய முடியும். நம் முன்னேற்றத்துக்கு அடிப்படையானது இத்தீர்மானம் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறோம். "நமது சங்கத்தின் ஆதரவிலிருக்கும் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் பண்டில் இருக்கும் பணத்தில் மூன்றிலொரு பாகத்தைக் கொண்டு நம்மவர்கள் வசிக்கும் சிறிய கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் பல ஏற்படுத்த வேண்டுமென்றும், மற்ற இரண்டுபாகத்தில் ஒரு பாகம் ரொக்கமாக இருக்கவேண்டுமென்றும், ஒரு பாகத்துக்கு தகுதியுள்ள பூ சொத்து வாங்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்திற்கு மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் நாடார் குல அபிமானிகளனைவரும் ஆதரவு காட்டுவீர்களென் றெதிர் பார்க்கிறோம்.

இராமலிங்கக் குருக்கள்,
சிவந்தி நாராயண நாடார்,
விருதுநகர்.

## அருப்புக்கோட்டை யூனியன் போர்டு.

### தாலுகா போர்டு பிரஸிடென்டுக்கு வேண்டுகோள்.

ஷை யூனியன் போர்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஸ்தானம் அடுத்து வரும் எலெக்ஷனில் காலி ஆவதால், அந்தஸ்தானத்தில் ஆதி இந்துக்களில் தகுதியுள்ள ஒருவராகிய ஸ்ரீமான் சு. குருசாமி என்பவரை நியமிக்கும்படி தாலுகா போர்டு பிரஸிடென்ட் அவர்களுக்கு முன்னமே அனுப்பப்பட்டிருக்கும், பொது ஜன விண்ணப்ப மனு, அபேக்ஷர் மனு ஆகிய வற்றிற்கிணங்க அடுத்துவரும் நாமினேஷனில் மேற்கண்டவரையே தவறாமல் நியமிக்கும்படி தாலுகா போர்டு பிரசிடெண்டவர்களை வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வீர. சு. பு. வீரய்யா,
அருப்புக்கோட்டை.

## "இந்து எலிமெண்ட்டரி பாடசாலை", ஆறுமுகநேரி.

### பொது நிதி தேவை.

28-5-28ல் வெளிவந்த நம்மித்திரனில் ஸ்ரீமான் எஸ். ஏ. ஸ்ரீநிவாச நாடார் அவர்களால் எழுதப் பெற்ற ஆறுமுகநேரி "இந்து எலிமெண்ட்டரி பாடசாலை"யின் 5-வதுவருஷக் கொண்டாட்டச் செய்தியைக் கண்ணுற்ற நானும் எனது நண்பர்களும் ஆனந்த சாகரத்தில் வாழ்ந்தோம். இக் கலாசாலையின் நான்கு வருஷத்தியக் கொண்டாட்டங்களையும் வெற்றிபெறச் செய்தது ஷையூர் பரோபகாரி ஸ்ரீமான் எஸ். ஏ. ராமச்சந்திரநாடார் அவர்கள் என்பது அங்கை நெல்லிக்கனி. இப்பாடசாலை எத்துணை நன்னிலையிலிருப்பினும் இதற்குப் பொது நிதி திருப்திகரமாயில்லை யென்பது நிதரிசனம். அவ்விஷயத்தில் ஷை ராமச்சந்திர நாடாரவர்களே வழிகாட்டி முயற்சித்தால் ஒரு பெருந் தொகை வசூலிக்கலாம் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

அதற்கு ஒரு கல்பமான வழி லாட்டரிச் சீட்டு பிடிப்பதே என எமக்குத் தோற்றுகிறது. முன்னொருமுறை இவ்வாறே கொஞ்சத் தொகை திரட்டப்பட்டது. அஃதேபோல் இன்னொருமுறையும் முயன்றால் நிச்சயமாக ஒரு கண்ணியமான தொகை திரட்டலாமென்பது உறுதி.

அடுத்த படியாக தக்ஷணமாற நாடார்கள் பேட்டைகளிலிருந்தும் ஷை கலாசாலைக்கு ஒரு சிறு தொகை உதவிபெற முயற்சித்தல் நலமாகும். அப்பேட்டைகளின் நிர்வாகிகள் கல்வி அபிவிர்த்திக்கான இவ்விஷயத்திற்கு உதவிபுரியக்கிஞ்சித்தும்பின்வாங்கார்கள் என நம்புகிறோம். இது விஷயத்திற்கு ஷையூர் ஸ்ரீமான் எஸ். ஏ. ராமச்சந்திரநாடார் அவர்கள் தமது மேலான அபிப்பிராயத்தை மித்திரன் மூலம் அறிவித்து பொது நிதி சேர்க்கும் முறையில் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறோம்.

சு. கு. தசரதன்,
கொழும்பு.

## "பையன்கள் மத்திமப்பாடசாலை" நாசரேத்.

### புதுக்கட்டட பிரதிஷ்டை விழா.

நாசரேத்தில் மிஸிஸ் ராண்டல் அம்மாளவர்கள் மேல் விசாரணைக்குட்பட்ட "பையன்கள் மத்திமப்பாடசாலை"க்காக சுமார் 7500 ரூ செலவிட்டு நேர்த்தியான கட்டடம் ஒன்று கட்டப்பட்டு 5-6-28 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு கனம் கோயில் பிள்ளை ஐயரவர்களால் திறந்து வைக்கப்பெற்று பிரதிஷ்டை விழா இனிது நடைபெற்றது. ஊரிலுள்ள முக்கியஸ்தர்கள் ஓர் கூட்டமாக மேளதாளத்துடன் வந்து பள்ளிக்கூடத்தின் முன் அமைக்கப்பட்டிருந்த சிங்காரப் பந்தலின் கீழ் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமரிக்கையாயமர்ந்தனர். அப்புறம் எல்லாரும் எழுந்து நிற்க, கனம் கோயில் பிள்ளை ஐயரவர்களால் பிரதிஷ்டை ஆராதனை நடத்தப்பட்டது.

ஆராதனை முடிந்த பின்னர் முக்கியஸ்தர், பெரியோர்களுக்கு மாலைகள் சூட்டப்பட்டன. கனம். கோயில் பிள்ளை ஐயரவர்கள் ஊரார் சார்பாகப் பேசும் பொழுது இப்பள்ளிக்கூடத்தைக்கட்டி முடித்ததற்காக கனம். ராண்டல் ஐயரவர்களுக்கு நன்றிகூறினதோடு, முறையே ஆண் கல்வி, பெண் கல்வி, கைத்தொழிற் கல்வி முதலியவற்றை விருத்தி செய்வது எங்கும் வழக்கமாயிருந்தும், நாசரேத்தூரில் அப்படியில்லாமல் எதிர் முறையாக கைத்தொழிற் கல்வி, பெண் கல்வி, ஆண் கல்வி விருத்தியாகியிருக்கிறதென்றும், ஆகவே ஆண் கல்வியை விருத்தி செய்ய ஆண்களுக்கு உயர்தரப் பாடசாலை அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், அவ்விதம் ஏற்படாவிடில் 5 வருஷங்களுக்குள் எவ்வித சமூம் பிரகாசபுரம் இ. ஏ. இ. சபையார் ஓர் உயர்தரப் பாடசாலை ஏற்படுத்திவிடுவார்களெனவும், அப்புறம் நாசரேத்தூரில் உயர்தரப் பாடசாலை ஏற்படுவது சுலபமல்ல என்றும், ஆகையால் கூடிய சீக்கிரம் ஷை பாடசாலையை ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்கள்.

கனம். ராண்டல் ஐயரவர்கள் பதிலளிக்கையில் அவ்வித எண்ணமே தம் மனத்தில் குடி கொண்டிருப்பதாயும், அது கடவுள் கடாட்சத்தாலும் ஊரார் உதவியாலும் முற்றுப்பெறுமென நம்புவதாயும் கூறி, இதுவரையும் பல விதத்திலும் உதவி புரிந்துவரும் ஸ்ரீமான் ஜே. ஆர். மனுவேல் அவர்களைப் புகழ்ந்தும் அங்கு கூடியிருந்த பெரியோர்க்கு தம் நன்றியைச் செலுத்துவதாகக் குறிப்பிட்டும் கூறினார்கள். இறுதியில் வெற்றிலை சந்தனம் முதலியவை வழங்கப்பட்ட பின்னர் யாவரும் குதுகலத்துடன் வெளிச்சென்றனர்.

அன்று சாயங்காலம் அப்பள்ளிக்கூடத்தின் மாணவருக்குப் பந்தய விளையாட்டுகள் வைக்கப்பெற்று மிஸிஸ் ராண்டல் அம்மாளவர்களால் பரிசுகளளிக்கப்பட்டன. அதன் பின்னர் மாணவருக்குச் சிற்றுண்டியும் காப்பியும் பரிமாறப்பட்டன. இவ்விதமாகப் பல பெரியோர்களின் உதவியால் பிரதிஷ்டைவிழா இனிதுநடைபெற்றதென பிரகாசபுரம் வாசியும், இப்பள்ளிக்கூடத்தின் உதவி ஆசிரியருமான ஸ்ரீமான் த. வே. சாமுவேல் எழுதுகிறார்.

## செய்தித்திரட்டு.

பம்பாயில் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனிக்குச் சொந்தமான மண்ணெண்ணெய்த் தொட்டியில் தீப்பற்றி சுமார் 8 லக்ஷம் ரூபாய் நஷ்டமுண்டாகி யிருக்கிறது.

* *

ஜப்பானில் ஹொகேய்டோ பிரதேசத்திற்கு வட கிழக்காகவுள்ள சாராபுட்ஸூ வென்னும் துறைமுகத்திற் கப்பால் மீன் பிடிக்கச் சென்ற சில ஜப்பானியப் படகுகள் பெருத்த அலையினால் கவிழ்ந்துவிட்டன. அவைகளிலிருந்த சுமார் 400 ஜப்பானியச் செம்படவர்கள் மூழ்கி இறந்து விட்டனர்.

* *

போத்தனூருக்கடுத்த கஞ்சகண்டபுரத்திலுள்ள ஒரு சத்திரத்தில் மூன்று பிச்சைக்காரர்கள் தங்கியிருந்தனர். அவர்கள் குழந்தைகளைத் திருட வந்தவர்களெனச் சிலர் எண்ணி அவர்களை யடித்ததில் ஒருவன் இறந்து போனான்.

* *

சிறுவாணி, மேட்டூர் இவைகளில் நடக்கும் தண்ணீர் திட்ட வேலைகள் சம்பந்தமாகப் பலி கொடுக்கும் பொருட்டு குழந்தைகளைத் திருடிக்கொண்டு போவதாக வதந்தி யுலாவுகிறது.

* *

இங்கிலாந்து தேசத்தில் டர்பியில் நடந்த குதிரைப் பந்தயத்தில் பாரோ-இன்-பர்னெஸ் கம்பெனியில் குமஸ்தா வேலை பார்த்து வந்த ஸ்ரீமதி. ஹெல் மாவிற்கு 5,125,000 பவுன்கள் முதற் பரிசு கிடைத்தன.

* *

திண்டுக்கல் தாலுகா காசிபாளையம் எனும் இடத்தில் உள்ள சுமார் 350 வீடுகளில் தீ விபத்தால் 120 வீடுகள் நாசமாயின. 3 பேர் மாண்டனர். 4 எருமைகளும் நூற்றுக்கு மேலான கோழிகளும், தான்ய மூட்டைகளும் எரிந்து போயின. இவ்வீடுகளனைத்தும் ஏழைமக்களுடையது. இவ்வேழை மக்கள் உண்ண உணவின்றியும் இருக்க வீடுகளின்றியும் பரிதபிக்கின்றனர். இவ்விஷயம் ஜில்லாக் கலெக்டருக் கறிவிக்கப்பட்டிருக்கிறது. புண்ணியசீலர்கள் பொருளுதவி செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

* *

நன்னிலம் தாலுகாவிலுள்ள பிடாகை யெனும் கிராமத்தில் ஆண்டாள் உருவச்சிலையும், பட்டுக்கோட்டைத் தாலுகா வேலூர் எனும் கிராமத்தில் உடையவர் பெருமான், ஆள்வார் முதலிய உருவச்சிலைகளும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ரூபாய் 500-0-0 க்கு மதிப்பிடப்படுகின்றன.

* *

வங்காளப் பஞ்ச நிவாரண உதவியாக வங்காளச் சர்க்கார் பஞ்சாயத்து இலாகா மந்திரி ஸர். பி. ஸி. மித்தர் ஒரு கோடி ரூபாய்கள் கடன் அநுமதித்து, அப்பணத்தை எல்லா ஜில்லாப் போர்டுகளும் தண்ணீர் வசதிக்கு மட்டும் உபயோகிக்க வேண்டுமென்றும் அப்பணத்தை 25 வருடங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேணுமென்றும் தண்ணீர் வசதி நிரந்தரமாயேற்பட்டு விட்டால் பஞ்சம் உண்டாகாதிருக்க ஏதுவாகுமென்றும் எல்லா டிவிஷன் கமிஷனர்களுக்கும் அறிவித்திருக்கின்றனர்.

* *

திருநெல்வேலி ஜில்லா வடக்கன் குளத்தினின்றும், கொழும்பு போய், "ஜேம்ஸ் பில்டிங் கம்பெனி" ஷிப்பிங் டிபார்ட் மெண்ட் அக்கவுண்ட்டண்ட் ஸ்ரீ ஜே. டெனிவெட் எனும் ஐரோப்பியரின் பங்களா காரியஸ்தராயிருந்து வந்த கா. ச. அந்தோணி முத்துநாடார் திடீரென வாய்வுரோயால்மரணமடைய அவர் எஜமானர் ஸ்ரீ. டெனிவெட் அவர் பிரேதத்தை ரூ 1000-0-0 வரை செலவு செய்து நல்லடக்கம் செய்து அன்னவர் குடும்பத்தாருக்கும் சிறிது பொருளுதவி செய்திருக்கின்றனர்.

* *

திருச்சி ஜில்லாவில் முருங்கப்பேட்டை முதலிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் துன்புற்ற ஜனங்களுக்கு வெள்ளக்கஷ்ட நிவாரண நிதி மத்தியக் கமிட்டியார் சுமார் ரூ 40000-0-0 வரை கடனுதவி கொடுத்திருப்பதாய்த் தெரிகிறது.

* *

மேஜர் செக்ரேவ், கோல்மன் ஆகியவிருவரும் பிப்ரவரி மத்தியில் பம்பாயிலிருந்து இங்கிலாந்திற்குத் தரை மார்க்கமாய் (7000 மைல்கள்) ஒரு சிறிய மோட்டாரிலேயே பிரயாணம் செய்து ஜூன் மீ முதல் தேதியில் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தனர். மோட்டார் யாதொரு பழுதுமடையவில்லை.

* *

நமது சக்ரவர்த்தியின்பிறந்த நாள் கொண்டாட்டத்தன்று பம்பாய் ஸ்ரீ. நாராயண அனந்த தேசாய்டோபிவாலாவிற்கு 'ராவ்சாகிப்' என்ற பட்டத்தைக் கொடுக்க, அதை மறுத்து அன்னவர் தமக்குச் சர்க்கார்பட்டம் வேண்டுவதில்லை யென்று சர்க்காருக்குச் கடிதம் எழுதியிருக்கிறார்.

* *

பம்பாய் கவர்னர், லார்ட் வில்ஸனின் காட்டிற்குப் பதிலாக ஸர். பிரட்ரிக் ஸ்லைக்ஸை கவர்னராக நியமிக்க நமது மன்னர் பிரான் அங்கீகாரம் செய்துவிட்டார்.

* *

அம்பாலா ஜில்லாவில் ஒரு கிராமத்தில் பெருந்தீ விபத்தேற்பட்டு அக்கிராமமே பூராவும் எரிந்து சாம்பலாகி விட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கான நஷ்ட மேற்பட்டிருக்கிறது.

* *

மைசூர் ராஜ்யத்தில் தேவாங்கிரி எனுமிடத்தில் ஒரு பெரும் புயலேற்பட்டு பல கட்டடங்கள் கீழே விழுந்துவிட்டன. கூரைகளெல்லாம் பிரித்தெறியப்பட்டன. ஒரு பெரிய நாடகசாலையின் சுவர் விழுந்து மூவர் மாண்டனர். லக்ஷக்கணக்கான ரூபாய்கள் நஷ்ட மேற்பட்டிருக்கின்றன.

* *

பெல்ஜிய ஆகாயவிமானிகளான க்ரூயி, க்ரோனென் என்ற இருவரும் 60 மணி, 7 நிமிஷம், 3½ விநாடிவரை ஆகாயத்திலேயே இருந்தனர். இதற்கு முன் இத்தாலியில் பரேரின், விப்ரீட் என்னும் இருவர் 57 மணி 7 நிமிஷம் நேரம் இருந்தனர்.

* *

லண்டனில் இரண்டாம் வருட 'நியூடி கேட்' பரிசு, ஓர் யுத்தப்படை உத்தியோகஸ்தரின் புதல்வி என் ஜலாதேவ் என்ற மாது எழுதிய கவிக்குக் கொடுக்கப்பட்டது.

* *

மத்திய திருவிதாங்கூரிலுள்ள கார்த்திகைப் பள்ளி யென்னும் இடத்தில் ஒரு அதிசயப் புயல் அடித்தது. அதனால் ஒரு நெல் வயல் சின்ன பின்னப்பட்டுப் போனது. ஓரிடத்தில் கிணறு போல் வளைவாக ஜலம் 30 அடி உயரம் சென்று மறுபடியும் பெரிய சப்தத்துடன்கீழே வந்து விழுந்தது. விழுந்தவுடன் அது உடைந்து அதிலிருந்து நெருப்புப் பொறிகளும் புகையும் கிளம்பின. இதை வெகு திரளான ஜனங்கள் வந்து பார்த்து ஆச்சரியமடைந்தனர். இதற்குக் காரணம் பூமிக்குள்ளிருந்து காற்றுடன் ஜலம் கலந்து வந்திருக்க வேண்டுமென்றும், அல்லது தெய்வீக காரணமாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

* *

நம்மிந்தியாவிற்கு 1930-ம் வருடத்திற்குள் சுயராஜ்யத்தையோ அல்லது பொறுப்புள்ள ஆட்சி முறையையோ ஏற்படுத்தும் பொருட்டு தேச முழுவதும் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு புதிய திட்டத்தைப் பண்டிதமாளவியா தயாரித்துக் கொண்டிருக்கிறார். இந்தியப் பொருளாதார நிலைமையைப் புனருத்தாரணம் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய கருத்தாகும். இத்திட்டம் இந்த ஜூன் மீ இறுதிக்குள் வெளியிடப்பெறும்.

* *

புதுக்கோட்டை மகாராஜாவின் பிரேதம் லண்டனில் "கோல்டர்ஸ் கிரீன்" என்ற இடத்தில் மார்த்தாண்ட இளவரசர், புதுக்கோட்டை ராணி முதலிய பிரபலஸ்தர்கள் முன்னிலையில், சென்னைப் பிராமணர் இருவர்களால் தகனக்கிரியை செய்யப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது. அவருடைய அஸ்தி மேல் கிரியை நடத்துவதற்குப் புதுக்கோட்டைக்கு அனுப்பப்படும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### எட்டாம் அத்தியாயம்.

#### இங்கிலாந்தில் செய்த வேலை.

இந்தியர்கள் தங்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ளமுயன்று அதன் பயனாகத் தங்கள் மதிப்பையும் உயர்த்திக்கொண்டதெப்படியென்று சென்ற அத்தியாயங்களில் பார்த்தோம். ஒரு புறத்தில் இவ்வாறு தங்கள் பலத்தை விருத்தி செய்து கொண்டிருக்கையில் மற்றொரு புறத்தில் அவர்கள் இந்தியாவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் கூடிய அளவு உதவிபெறவும் முயன்றார்கள். இந்தியாவில் செய்த வேலைகளைப்பற்றி ஏற்கனவே ஓரளவு கூறிவிட்டேன். இங்கிலாந்தில் ஆதரவு தேடுவதற்குச் செய்த முயற்சிகளைப் பற்றிய சிறிதளவு கூற வேண்டியிருக்கிறது. முதலாவதாக, இந்தியக் காங்கிரஸ் மகாசபையின் பிரிட்டிஷ் கமிட்டியுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளல் அவசியமாயிருந்தது. ஆதலின் இந்தியாவின் மாபெரும் கிழவரான தாதாபாய் நௌரோஜிக்கும், மேற்படி கமிட்டியின் தலைவரான ஸர். வில்லியம் வெட்டர்பர்னுக்கும் வாரந்தோறும் முழு விவரங்களடங்கிய கடிதங்கள் வரையப்பட்டன. விண்ணப்பப் பிரதிகள் அனுப்பும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டபோதெல்லாம் தபால் செலவுக்கும் கமிட்டியின் பொதுச் செலவுக்குமாகக் குறைந்தது பத்து பவுன் பணமும் அனுப்பிவந்தோம்.

தாதாபாய் நௌரோஜியைப் பற்றிய தூய்மையுள்ள ஒரு ஞாபகத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் கமிட்டியின் தலைவர் அல்லர். ஆயினும், பணத்தை முதலில் அவருக்கு அனுப்பி எங்கள் சார்பாகத் தலைவரிடம் கொடுக்கச் செய்வதே முறையென்று எங்களுக்குத் தோன்றிற்று. ஆனால் முதல்முறைஅனுப்பிய தொகையையே தாதாபாய் திருப்பி அனுப்பிவிட்டார். அத்துடன் கமிட்டிக்கென்று உத்தேசிக்கப்பட்ட கடிதம் பணம் முதலியவற்றை ஸர். வில்லியம் வெட்டர்பர்னுக்கே நேராக அனுப்பி வைக்கும்படி எங்களுக்கு எழுதியிருந்தார். தம்மால் இயன்ற எல்லா உதவியும் செய்யச் சித்தமாயிருப்பதாகவும், ஆனால் நாங்கள் ஸர். வில்லியம் அவர்களின் மூலம் கமிட்டியின் உதவியை நாடினால் தான் அதனுடைய மதிப்பு அதிகமாகுமென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். தாதாபாய் மிகவும் வயது சென்றவரா யிருந்தும் கடிதப் போக்குவரவில் மிக ஒழுங்குள்ளவரா யிருந்ததையும் நான் கவனித்தேன். எழுதுவதற்கு விசேஷமாக ஒன்றுமில்லாத போதும், அவர் எங்கள் கடிதங்கள் வந்து சேர்ந்த விவரத்தை மறு தபாலிலேயே தெரிவிப்பார். அத்துடன் சில தைரிய மொழிகளும் கூறியிருப்பார். இத்தகைய கடிதங்களைக்கூட அவர் தாமே தமது கையினால் எழுதியதுடன் அவற்றிற்கு நகல் பிரதிகளும் வைத்திருந்தார்.

#### ஸர். வில்லியம்ஹண்டர்.

எங்களுடைய ஸ்தாபனத்துக்குக் "காங்கிரஸ்" என்று பெயர் கொடுத்தோமாயினும் எங்கள் குறைகளை ஒரு கட்சிப்பிரச்னையாக்கும் எண்ணம் எங்களுக்கில்லையென்று முன் அத்தியாயமொன்றில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆதலின், மற்றக்கட்சிகளைச் சேர்ந்த கனவான்களுடனும் நாங்கள் கடிதப் போக்குவரவு தொடங்கினோம். இவ் விஷயத்தை தாதாபாய்க்கும் தெரிவித்திருந்தோம். நாங்கள் அவ்வாறு கடித மெழுதியவர்களில் முக்கியமானவர்கள் ஸர். ஹண்டரும் ஆவார்கள். ஸர். மஞ்சர்ஜி அப்போது பார்லிமெண்ட் அங்கத்தினராயிருந்தார். அவருடைய உதவி பெரிதும் பயன்பட்டது. அவர் அடிக்கடி எங்களுக்கு முக்கியமான யோசனைகளைச் சொல்லி உதவினர். தென்னாப்பிரிக்கா இந்தியர் பிரச்னையின் முக்கியத்தை இந்தியர்களுக்கும் முன்னதாகவே அறிந்து அரிய உதவி அளித்தவர் ஒருவர் உண்டானால் அவர் ஸர். வில்லியம் ஹண்டர் என்றே சொல்லவேண்டும். அவர் "டைம்ஸ்" பத்திரிகையில் இந்தியப் பகுதிக்கு ஆசிரியராயிருந்தார். ஆதலின், அவருக்கு நாங்கள் முதன் முதலாக எழுதியதிலிருந்து, அப்பத்திரிகையில் எங்கள் விஷயத்தைப்பற்றி நடு நிலையினின்று எழுதி வந்தார். எங்கள் கட்சியை ஆதரித்து அவர் பல கனவான்களுக்குச் சொந்த முறையில் கடிதங்களும் எழுதினர். ஏதாவது முக்கியமான பிரச்னை விவாதத்திலுள்ள போதெல்லாம் அவர் வாரந்தவறாமல் எங்களுக்குக் கடிதம் எழுதி வந்தார். அவருடைய முதல் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:—"அங்குள்ள நிலைமையைப்பற்றி அறிய மிகவும் வருத்தமாயிருக்கிறது. உங்கள் போராட்டத்தை மரியாதையுடனும், அமைதியாகவும், மிகைப்படுத்தலின்றியும் நடத்திவருகின்றீர்கள். இவ்விஷயத்தில் என் அநுதாபமெல்லாம் உங்கள் கட்சியிலேயே இருக்கின்றது. உங்களுக்கு நீதி கிடைக்கும்படி செய்வதற்குப் பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் என்னாலியன்ற வரை முயலுவேன். இவ்விஷயத்தில் நீங்கள் ஓர் அணுவளவும் விட்டுக் கொடுக்க முடியாதென்று நான் நிச்சயம் பெற்றுள்ளேன். உங்கள் கோரிக்கை மிக நியாயமான தொன்றாதலால், அதை மட்டுப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நடு நிலையுள்ள மனிதன் எவனும் கூறமாட்டான்."

இவ்விஷயமாக அவர் "டைம்ஸ்" பத்திரிகையில் வரைந்த முதல் கட்டுரையில் மேற்படி கடிதத்தை அப்படியே பெயர்த்தெழுதியிருந்தார். பின்னர் எப்போதும் அவரது இந்த மனப்பான்மை மாறவேயில்லை. அவர் காலஞ்சென்றதற்குச் சில நாளைக்கு முன்பு இந்தியப் பிரச்னையைப்பற்றித் தொடர்ச்சியான சில கட்டுரைகள் எழுத உத்தேசித்து அதற்கு ஆரம்பமும் செய்திருந்தார் என்று லேடி ஹண்டர் பின்னர் எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்தார்.

#### இருவகைப் பயன்கள்.

கடைசி அத்தியாயத்தில் மனுசுக்லால் நாஸாரின் பெயரைக் குறிப்பிட்டிருந்தேன். இந்திய சமூகத்தின் சார்பாக நிலைமையை விவரமாக எடுத்துச் சொல்லுமாறு இவரை இங்கிலாந்துக்கு அனுப்பியிருந்தோம். எல்லாக் கட்சியினருடனும் சேர்ந்து வேலை செய்யுமாறு அவருக்குச் சொல்லியிருந்தோம். இங்கிலாந்திலிருக்கையில் அவர் ஸர். வில்லியம் ஹண்டர், ஸர். புவனகிரி இவர்களுடனும், இந்தியக் காங்கிரஸ் மகாசபையின் பிரிட்டிஷ் கமிட்டியுடனும் தொடர்பு கொண்டிருந்தார். அவ்வாறே மாஜி ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் பலரையும், இந்திய மந்திரி காரியாலயம், குடியேற்ற நாட்டு மந்திரி காரியாலயம் இவைகளையும் அடிக்கடி பார்த்து வந்தார். இவ்வாறு கூடுமான எல்லா வழிகளிலும் நாங்கள் முயற்சி செய்து வந்தோம். இவற்றின் வெளிப்படையான பயன் யாதெனில், ஏகாதிபத்திய அரசாங்கத்தார் வெளி நாட்டிலுள்ள இந்தியர் நிலைமையை முதல்தர முக்கியமுடைய பிரச்னையாகக் கருதலாயினர். இது மற்றக் குடியேற்ற நாடுகளில் சில நல்ல பயன்களுக்கும் அவ்வாறே கெட்ட விளைவுகளுக்கும் காரணமாயிற்று. அதாவது, இந்தியர்கள் சென்றிருந்த குடியேற்ற நாடுகளில் எல்லாம் அவர்கள் தங்கள் நிலைமையின் முக்கியத்தை உணரலாயினர்; வெள்ளைக்காரர்களோ தங்களுடைய ஆதிக்கத்திற்கு இந்தியர்களால் அபாயம் விளையப் போவதாக எண்ணி, அதற்குரிய ஆயத்தம் செய்யலாயினர்.

## கழுகுமலை, ஸ்ரீமான் ஆ. இராமசாமி நாடாரவர்கள் கவனிக்கவேண்டும்.

கழுகுமலை ஸ்ரீமான் ஆ. இராமசாமி நாடாரவர்கள் 21-5-28வெளியானநமது 'நாடார்குலமித்திர'னில், நாகபட்டணம் எஸ். கே. ராமசாமிநாடாரவர்களுக்குச் சொன்ன விஷயங்களில் கோவில் விஷயமாய் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்பது அவர்களுக்குச் சரியாகத் தோன்றவில்லையென்றும், நம்மவர்கள் வசிக்கும் எல்லா வூர்களிலும் நமக்குச் சொந்த ஆலயங்கள் இருக்கிறதே போதுமானது என்றும் எழுதியிருக்கிறார்கள்.

இந்த வார்த்தைகளை மேற்படி தொண்டர்படை சேனாதிபதியான ஸ்ரீமான் ராமசாமி நாடாரவர்களாவது மற்ற யாராவது ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால், இந்தியாவில் இந்து மதத்தில் பிறந்து வளர்ந்த இந்து மக்களாகிய நாமும் மற்றோர்களும் பக்தி உண்டாகும் பொருட்டு கட்டிவைத்த கோவில்களில் சிதம்பரம், பழனி, திருவண்ணாமலை முதலிய புராதன ஆலயங்களிலெல்லாம் சமத்துவமாக சுவாமிதரிசனம் செய்ய நம்மவர்கள் செல்கிற வழக்கமிருக்கிறது. ஆனால் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகியஜில்லாக்களில் மட்டும் சில விடங்களில் போகவிடாமல் மற்ற வகுப்பினர்கள் மத உண்மையும் நீதியும் தெரியாமல் நம்மவர்களைத் தடுத்து மதத்துக்கு ஈனம் உண்டாக்குகிறார்கள். இந்த அநியாயத்தை நாம் சகித்துக்கொண்டு அவர்களுக்குப் புத்தி வரும்வரை காத்திருக்கலாமென்று எத்தனையோ வருடகாலம் பொறுத்தும் பார்த்தோம்—எத்தனையோ அறிவாளிகளிடம் சொல்லியும் பார்த்தோம்—எல்லாம் துர்லபமாய்விட்டன. இப்படியே இன்னும் இருப்போமானால் நம் உரிமையை நாம் பாதுகாக்கத் தவறியவர்களாவோம். நம் மதத்தில் பல கோவில்களிருக்கப் பிறிதொரு கோவிலுக்குப் போவானேன்? என்பது தான் கழுகுமலை ஸ்ரீமான் ராமசாமிநாடாரவர்களுடையகேள்வியாகும். நமக்குரிமையில்லாத கோவில்களெல்லாம் நம் முன்னோர்களால் கட்டப்பட்டனவாகையால் நம் சுதந்திரத்தை நாம் பாராட்ட வேண்டுமென்னும் நியதி யொருபுற மிருந்தபோதிலும், நாமும் இந்துக்களே என்ற முறையில் நம் உரிமைக்குப் போராடத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு நாடு—ஒருமதம்—ஒரு கடவுள் கொண்டவர்களுக்குள் உயர்வு தாழ்வு காட்டப் பார்த்திருப்பது ஆண்டவனை பொருந்திய யாருக்கும் ஆத்திரமூட்டாதிராது. இவ்வகையில் ஆத்திரம் பொங்கி நாம் சமயத்தை எதிர்நோக்கியே யிருந்தோம் என்பது குற்றமாகாது. இப்போது சமயம் வாய்த்துளது. தேச சீர் திருத்தம் குறித்தும், ஆசார சீர் திருத்தம் குறித்தும் நாட்டில் பேரலைபோல் ஒலித்து வரும் பிரசாரம் உயர்வு தாழ்வுப் பிணக் கொழிக்க வந்திருக்கிறது. இது சமயத்தில் நாம் வாளா விருந்து விட்டால் கோழைகளே யாவோம். சமத்துவத்தை நிலை நாட்டவே நாம் குறிகொள்வதல்லால், அக்கோவில்களில்தான் பெரிய சாமிகளிருக்கின்றனவென்றல்ல. தெய்வம் எங்கும் நிறைந்த பொருள். தேசத்தை முன்னிட்டு நாம் ஆற்றும் பணியாயும், நம் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியாயும் ஆலயப் பிரவேச போர்ப் கொண்டு சமத்துவம் தேடவேண்டும். மகாத்மா காந்தியடிகள் சொல்வதென்ன? ஒவ்வொரு சமூகமும் தத்தமக்குள்ள சமத்துவக் குறைகளை நீக்கப் போர் துவங்க வேண்டுமென்றன்றோ? அம்மாதிரி எல்லாச் சமூகங்களும் ஏகோபித்து நின்றால் சமத்துவம் தானே தலை தூக்குமென்பது அப் பெரியாரின் கருத்து. இது யாரால் மறுக்கப்படும்? முடியா. அன்னாரின் கருத்துக்கிசைய நாம் நடந்து கொள்வது முக்கிய கடமையா யிருக்கிறது. நம் கௌரதையைக் காப்பாற்ற நாம் பின்னடையக் கூடாது. இதற்கு உயர்வழி சத்தியாக்கிரகமே யாகும். இச் சாத்வீகப் போரினால்

(7-ம் பக்கத்தின் தொடர்பு.)

பேர் புகழ்பெறவும், தங்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவும் சென்றிருப்பார்களென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் இத்தகைய நம்பிக்கை ஆத்மாவை எப்படி முன்னேறச் செய்யுமென்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

#### எனது விரதம்.

ஆதலின் இதுபற்றியே அன்றிரவு முழுதும் யோசித்தேன். எத்தனையோ ஆஷாடபூதிகளிடையே சில பக்திமான்களும் இருக்கின்றனரென்பது உண்மை. அவர்கள் இறைவன் சந்நிதானத்தில் குற்ற மற்றவர்களாகவே இருப்பார்கள். ஹரித்துவாரத்துக்கு வந்தது பாவமென்று தெரிந்தால் நான் அதைக் கண்டித்துவிட்டு மறுநாளே புறப்பட்டுவிட வேண்டும், அல்லது அது சரியென்று தோன்றினால் அங்கு நிகழ்ந்த சில குற்றங்களிலிருந்து என்னைப் பரிசுத்தமாக்கிக்கொள்ளும் பொருட்டு நான் சில விரதங்களை மேற்கொள்ள வேண்டியவனாவேன். இது என் இயற்கை. நான் சில கட்டு திட்டங்களுக்கு அடங்கியே என் வாழ்க்கையை நடத்தி வருகிறேன். கல்கத்தாவிலும் ரங்கூனிலும் எனக்கு விருந்தளித்தவர்களுக்கு நான் இழைத்த தொந்தரவை யோசித்தேன். என் ஆகார வகையில் சில நியதிகளை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் நான் விருந்தினனாகப் போகு மிடங்களில் பொது ஜன சேவை செய்ய விரும்பும் எனக்கு அவர்கள் சேவை செய்யவேண்டியதாக நேரிட்டு விடுமென்பதை அறிந்தேன். எனவே இந்தியாவில் இருக்கும்போது இனி 24 மணி நேரத்தில் ஐந்து பதார்த்தங்களுக்கு மேல் உட்கொள்வதில்லையென்றும், இருட்டு ஆனபிறகு சாப்பிடுவதில்லை யென்றும் தீர்மானித்தேன். இவ்வாறு விரதங்கொள்வதால் அனுபவிக்க வேண்டிவரும் கஷ்டங்களைப் பற்றியும் யோசித்தேன். ஆனால் இதைக் கடைப்பிடித்தொழுகவே நிச்சயித்தேன். தேக அசௌக்கியமான காலத்தில் மருந்து உட்கொண்டால் அதை ஒரு பதார்த்தமாகக் கருதுவதா என்று யோசித்து முடிவில் எக்காரணத்தைக் கொண்டும் விதி விலக்கு ஏற்படுத்துவதில்லை என்று தீர்மானித்தேன்.

இப்போது பதின்மூன்று வருஷங்களாக இந்த விரதத்தை அநுஷ்டித்து வருகிறேன். எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சோதனைகளுக்கெல்லாம் இடம் தராமல் என் விரதத்தையே என் ஆயுதமாகக் கொண்டேன். அந்த விரதம் என்னைப் பல வியாதிகளிலிருந்து தடுத்து என் ஆயுளில் சில வருஷங்களைக் கூட்டியிருக்கின்றதென்பதே என் அபிப்பிராயம்.

---

சாத்தியமாகாத தொன்றில்லை. காலமும் ஒத்திருக்கிறது. இதை யோர்ந்தே ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி நாடாரவர்கள் சமத்துவம் விரும்பும் நம் ஒவ்வொருவரையும் சத்தியாக்கிரகப் போருக்கு அறை கூவுகிறார்கள். அன்னவருக்கு நாடார் சமூகம் பூரண உதவி புரிந்து ஆதரித்துத் தனது சுய மரியாதையைக் காப்பாற்றுவது கடனாகும். இதை கழுகுமலை ஸ்ரீமான் ஆ. ராமசாமி நாடாரவர்கள் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாகில் யான் கூறுவது நியாயமென்று புலப்படாது போகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீ. சி. சுந்தரநாடார்,
போடிநாயக்கனூர்.

---

சமூக சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை ஆண் பெண் இருவருமாகச் சேர்ந்து போற்றி வளர்க்க வேண்டும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 5. அத்தியாயம் 6.

### இந்திய ஊழிய சங்கம்.

நான் பூனாவுக்கு வந்த பிறகு சிரார்த்தச் சடங்குகள் நடந்தன. அதன் பின்னர் இந்திய ஊழியச் சங்கத்தின் எதிர்கால நிலைமையைப் பற்றியும், நான் அதில் சேரவேண்டுமோ வேண்டாமா வென்பதைப் பற்றியும் விவாதித்துக் கொண்டிருந்தோம். நான் அங்கத்தினராக வேண்டுமோ வேண்டாமா வென்பதைப் பற்றி நானே பேசுவது சிறிது கஷ்டமாக இருந்தது. ஸ்ரீமான் கோகலே இருந்தபோது என்னை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ள வேண்டிய நிலைமையில் நான் இருந்ததுவில்லை. அவருடைய விருப்பப்படி நடந்துகொள்ள வேண்டியவனும் நான் இருந்தேன். அத்தகைய நிலைமையிலிருந்து வருவதே எனக்கும் திருப்திகாமாகவிருந்தது. இந்திய ராஜீய வாழ்வாகிய புயற்காற்றில் கொம்பவேண்டியிருந்த எனக்கு ஒரு தருநோன வழிகாட்டி வேண்டியிருந்தது. அந்த ஸ்தானத்தில் ஸ்ரீமான் கோகலே இருந்துவந்தார். அவரிடம் என்னுடைய எதிர்கால நிலைமையை ஒப்புவித்திருந்தேன். இப்பொழுது அவருடைய காலமாகி விட்டது. அவருடைய சங்கத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்பது எனது கடமையென மதித்தேன். அவ்விதம் செய்வது கோகலேயின் சூக்ஷ்ம சரீரத்திற்குத் திருப்தியை அளிக்குமென்று நான் நினைத்தேன். ஆகவே தயக்கமின்றியிலும் மன உறுதியுடனும் என்னைச் சேர்த்துக் கொள்ளும்படி செய்வதற்குப் பிரயத்தனம் செய்ய ஆரம்பித்தேன்.

அந்த சங்கத்தின் அங்கத்தினர்களில் பெரும்பாலோர் இந்த சந்தர்ப்பத்தில் பூனாவிலிருந்தனர். என்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தேன். அவர்களுக்கு என்னைப்பற்றி இருந்த பயத்தையும் நிவர்த்திசெய்ய முயற்சி செய்தேன். ஆனால் இவ்விஷயத்தில் அவர்களுக்குள் அபிப்பிராய பேதமிருந்து வந்தது. ஒரு சாரார் என்னைச் சேர்த்துக்கொள்ள இசைந்தனர்; மற்றொருசாரார் அதற்கு எதிரிடையாக இருந்தனர். இருந்தாலும் என்னைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று நினைத்தவர்கள் என்னிடத்தில் அபிமானம் குறைந்தவர்களல்லவென்பது எனக்குத் தெரியும்; ஆனால் சங்கத்தினிடத்தில் அவர்களுக்கு இருந்த பற்றானது என்னிடத்தில் அவர்களுக்கு இருந்த அபிமானத்தை விட அதிகமானதாக இருந்தது. நீண்ட கால விவாதத்திற்குப் பிறகு நாங்கள் கலைந்தோம். முடிவாகத் தீர்மானம் செய்வதை பின்னொரு கூட்டத்திற்கு ஒத்தி வைத்துக் கொண்டோம்.

நான் வீட்டுக்கு வந்தபொழுது எனது மனது மிகவும் கலக்கமடைந்திருந்தது. மெஜாரிட்டி ஓட்டுகளால் அங்கத்தினராக நான் சேர்த்துக் கொள்ளப்படுவது நியாயமா? அவ்விதம் செய்வது ஸ்ரீமான் கோகலேவிடம் எனக்கிருந்த விசுவாசத்திற்குப் பொருத்தமானதாகுமா? என்ற கேள்விகள் என் மனதில் உதித்தன. என்னைச் சேர்த்துக்கொள்ளுவதில் அங்கத்தினர்களுக்குள் தீவிரமான அபிப்பிராயமிருந்துவரும் நிலைமையில், என்னுடைய விண்ணப்பத்தை வாபீஸ் வாங்கிக்கொண்டு என்னைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு எதிரிடையாக இருப்போரைச் சங்கடமான நிலைமையிலிருந்து நிவர்த்திசெய்வதே உசிதமென எனக்குத் தோன்றியது. சங்கத்திடமும், கோகலே யிடமும் எனக்குள்ள விசுவாசத்தைக் காட்டிக் கொள்ளுவதற்கு இதுவே தகுந்த மார்க்கமென்று நான் நினைத்தேன். இத்தகைய எண்ணம் திடீரென்று என் மனதில் உதித்தது. உடனே ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தை நடத்தவேண்டாமென்று ஸ்ரீமான் சாஸ்திரிகளுக்கு நான் கடிதம் எழுதினேன். என்னைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு எதிரிடையாக இருந்தவர்கள் என்னுடைய முடிவைப் பாராட்டினர். அது அவர்களை ஒரு சங்கடமான நிலைமையிலிருந்து விடுவித்தது. அதனால் அவர்களுக்கும் எனக்கும் சிநேகமும் அதிகரித்தது. என்னுடைய விண்ணப்பத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டதால், நான் அந்த சங்கத்தின் உண்மையான அங்கத்தினனாகி விட்டேன்.

நான் அங்கத்தினனாகாமலிருந்து விட்டதே சரியென்றும், என்னைச் சேர்த்துக்கொள்வதற்கு எதிரிடையாக இருந்தவர்களின் அபிப்பிராயமே சரியானதென்றும் அனுபவத்திலிருந்து எனக்குத் தெரிகிறது. கொள்கைகளிலும் எங்களுக்குள் அதிக வித்தியாசமிருந்து வருவது அனுபவத்தில் எனக்குத் தெரிகிறது. ஆனால் அபிப்பிராயபேதம் காரணமாக எங்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டுவிடவில்லை. நாங்கள் எப்பொழுதும் சகோதர பாவமாகவே இருந்து வந்திருக்கிறோம். சங்கத்தின் பூனா காரியாலயமானது எனக்கு எப்பொழுதும் புண்ய க்ஷேத்திரமாகவே இருந்து வருகிறது.

உத்தியோக ஹோதாவில் நான் இந்திய ஊழிய சங்கத்தின் அங்கத்தினனாகவிட்டபோதிலும், அங்கத்தினருடைய உணர்ச்சியே எனக்கு இருந்து வருகிறது. சரீர சம்பந்தத்தைவிட பாரமார்த்திக சம்பந்தம் மேலானது. பாரமார்த்திக சம்பந்தமில்லாத சரீர சம்பந்தமானது ஆத்மா இல்லாத சரீரத்திற்கு ஒப்பானதாகும்.

---

## பாகம் 5. அத்தியாயம் 7.

### ஹரித்துவாரக் கும்பமேளம்.

டாக்டர். மேத்தாவைச் சந்திக்கும் பொருட்டு நான் ரங்கூனுக்குப் போகும் வழியில் கல்கத்தாவில் தங்கவேண்டியதாயிற்று. எனவே, காலஞ்சென்ற பாபு பூபேந்திரநாத் வசுவின் விருந்தினனாக இருக்க நேரிட்டது. சாதாரணமாகவே வங்காளியர் விருந்தோம்பலில் பெயர் போனவர்கள். அவர்கள் எனக்கு மிக்க உயரிய முறையில் விருந்தளித்தார்கள். அக்காலத்தில் நான் வெறும் பழ ஆகாரம் மட்டும் உட்கொண்டதால், கல்கத்தாவில் கிடைக்கக்கூடிய சிறந்த பழ வகைகளையெல்லாம் எனக்காகத் தருவித்தார்கள். அவர் வீட்டு மாதர்கள் இரவெல்லாம் தூங்காமல் பலவிதக்கொட்டைகளையும் பக்குவப் படுத்துவதிலேயே காலங் கழித்தார்கள். பழங்களை இந்திய முறையில் பக்குவப் படுத்துவதில் மிக்க ஜாக்கிரதையுடன் இருந்தார்கள். எனக்கு மட்டுமேயன்றி என் நண்பர்களுக்கும், அவர்களில் ஒருவனான என் குமாரன் ராமதாஸுக்கும் அவர்கள் பற்பலவிதமான இனிய தின்பண்டங்களைத் தயாரித்துக் கொடுத்தார்கள். நான் அவர்களுடைய விருந்தோம்பும் சுபாவத்தைப் பாராட்டியபோதிலும், இரண்டு இல்லது மூன்று விருந்தினர்களுக்காக வீட்டிலுள்ள மாதர்களெல்லாம் இரவும் பகலும் வேலை செய்வதென்றால் அது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதிலிருந்து தப்புவதற்கு எனக்கு வழி இல்லை.

### ரங்கூன் பிரயாண அனுபவம்.

ரங்கூன் பிரயாணத்தில் நான் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்தேன். ஸ்ரீ. வசு வீட்டில் பெற்ற உபசாரங்களுக்கு நேர்மாறாகப் பல கஷ்டங்களைக் கப்பலில் அனுபவிக்க வேண்டியதாயிற்று. ஸ்நான அறைமிக்க அசுத்தமாக இருந்தது. கக்கூஸ்கள் மலங்களால் மூடப்பட்டிருந்தன. கக்கூஸில் போகவேண்டுமானால் மல ஜலங்களைத் தாண்டிக்கொண்டு தான் போக வேண்டும். அல்லது அதன்மீதே இருக்கவேண்டும். இதை யாரும் பொறுக்க முடியாதல்லவா? நான் பிரதம ஆபீஸரைக் கண்டும் பயனில்லாதொழிந்தது. அங்குள்ள அசுத்தத்துக்குக்காரணமாயிருந்த சில குறைகளையும் பிரயாணிகள் தங்களுடைய மூட வழக்கங்களாலேயே நிரவி விட்டார்கள். அவர்கள் உட்கார்ந்த இடத்திலேயே துப்பினார்கள். அவர்களைச் சுற்றிலும் சாப்பிட்ட இலைகளையும், எச்சில்களையும், புகையிலை வெற்றிலை பாக்கு மென்று அதைத் துப்பியதையும் கொண்டு நிரப்பிவிட்டார்கள். அங்கே சத்தத்துக்குக் குறைவில்லை. சந்தையைப் போல தான் இருந்தது. ஒவ்வொருவரும் எவ்வளவு இடத்தை அடைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் பிடித்துக் கொண்டார்கள். அவர்களைவிட அவர்களுடைய சாமான்களுக்குத் தான் இடம் அதிகம் பிடித்தது. இத்தகைய சங்கடமான நிலையில் இரண்டு நாட்களைக் கழித்தோம்.

ரங்கூன் போய்ச் சேர்ந்ததும், நான் கப்பல் கம்பெனியின் ஏஜெண்டுக்கு இதைப்பற்றி எழுதினேன். இக்கடிதத்தின் காரணமாகவும், ஸ்ரீ. மேத்தாவின் முயற்சியாலும், திரும்பி வரும் போது நான் அவ்வளவு கஷ்டப்பட வேண்டிய அவசியம் நேரவில்லை. ரங்கூனிலும் நான் தங்கிய வீட்டாருக்கு என் பழ ஆகாரம்அதிகத் தொந்தரவைக் கொடுத்தது. டாக்டர். மேத்தாவின் வீடு என் வீடாகவே தோன்றியபடியால், நான் எனக்குக் கொடுக்கவேண்டிய ஆகார விஷயத்தில் தொந்தரை இல்லாமல் செய்திருக்கலாம். ஆனால் இன்னவகை தான் உட்கொள்ளுவது, இன்னவகை உட்கொள்வதில்லை என்னும் நியதியை நான் ஏற்படுத்திக் கொள்ளாததால் அவர்கள் எனக்களித்த ஆகாரவகையில் கட்டு திட்டங்களை ஏற்படுத்த முடியவில்லை. நான் இரவுக்கு முன்பே என் இறுதி ஆகாரத்தை முடித்துக்கொள்வது வழக்கம். ஆயினும் இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்கு முன் எனக்கு ஆகாரம் கொடுக்கவில்லை.

### ஹரித்துவாரப் பிரயாணம்.

அந்த 1915 ஆம் வருஷத்தில் ஹரித்துவாரத்தில் 13 வருஷத்துக் கொருமுறை நடக்கின்ற கும்பமேளம் நடைபெற்றது. நான் அந்த கும்பமேளத்தைப் பார்க்க ஆவல்கொண்டிருந்ததுடன், மகாத்மா முன்ஷிராமையும் அவருடைய குருகுலத்தில் காணவிரும்பினேன். கோகலேயின் சங்கத்தார், பண்டித ஹிருதயநாத் குன்ஸ்ருவின் தலைமையில் சில தொண்டர்களை அனுப்பியிருந்தார்கள். டாக்டர். தேவ் வைத்திய உதவிக்காக வந்திருந்தார். அவர்களின் உதவிக்காக போனிக்ஸ் கூட்டத்தாரையும் அனுப்பும்படி என்னைக் கேட்டுக்கொண்டபடியால் மகன்லால் காந்தியும் எனக்கு முன்னரே அவர்களுடன் கலந்திருந்தார். நான் ரங்கூனிலிருந்து திரும்பி வரும்போது அவர்களுடன் சேர்ந்துகொண்டேன்.

கல்கத்தாவிலிருந்து ஹரித்துவாரம் செல்லும் வழியில் பிரயாணம் மிக்க கஷ்டமானதாக இருந்தது. சில சமயங்களில் வண்டிகளில் விளக்குகளே இருக்கவில்லை. சஹாரன்பூர் முதல் எங்களை மாடுகளை ஏற்றிச் செல்லும் சாமான் வண்டியில் அடைத்து விட்டார்கள். அவைகளுக்கு மேல் கூரை கிடையாது. கீழே இரும்புத் தகடுகள். இதனால் வெயிலில் நாங்கள் பொறிக்கப்பட்டோம். இதனால் தாகவரட்சி உண்டாகிக் கஷ்டப்பட்ட காலத்திலும் வைதீக ஹிந்துக்கள் முஸல்மான் கொண்டுவந்து கொடுத்த நீரைப் பருகத் துணியவில்லை. அவர்கள் ஒரு ஹிந்து தண்ணீர் கொடுக்கிற வரையில் காத்திருந்தார்கள். ஆனால் இதே ஹிந்துக்கள் அதிக தேக அசௌக்கியத்துடன் இருக்கும்போது மருந்தென்று சொல்லி மதுச்சரக்குகளையோ, வேறு எதையோ முஸல்மானோ அல்லது கிறிஸ்தவரோ கொண்டு வந்து கொடுத்தபோதிலும் அதை உட்கொள்வதில் சிறிதும் பின் தயங்குவதில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் மறக்க முடியாது.

சாந்திநிகேதனத்தில் இருந்த போதே, இந்தியாவில் எங்களுடைய வேலை குப்பைவாரும் வேலையாகவே இருக்குமென்று அறிந்து கொண்டேன். ஹரித்துவாரத்தில் தொண்டர்களுக்காக வென்று ஒரு தர்மசாலையில் கூடாரமொன்று போடப்பட்டிருந்தது. டாக்டர். தேவ் சில குழிகளைத் தோண்டி அவற்றை மலங்கழிக்குமிடமாக ஏற்படுத்தினர். இதைக் கவனிப்பதற்காக அவர் கூலிகொடுத்து குப்பைவாரிகளை ஏற்படுத்த வேண்டியதாயிற்று. ஆதலின் நான் போனிக்ஸ் கூட்டத்தாரைக் கொண்டு மலங்களை அப்புறப்படுத்தும் வேலையைச் செய்வதாக ஒப்புக்கொண்டேன். இதை அவரும் ஏற்றுக்கொண்டார். நான் இவ்வேலையை ஒப்புக்கொண்ட போதிலும் மகன்லால் காந்தியே இதைச் செய்து முடிக்க வேண்டியவரானார். நான் என் கூடாரத்தில் உட்கார்ந்து கொண்டு என்னைப்பார்க்க வருகிறவர்களுக்கெல்லாம் தரிசனம் கொடுப்பதே என் வேலையாக இருந்தது. அவர்களுடன் மதம் முதலிய பல விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியதாயிற்று. நான் என் சொந்த வேலைகளையும் கவனிக்க முடியவில்லை. நான் ஸ்நானம் செய்யச் சென்றாலும், சாப்பிடச் சென்றாலும் என்னைப் பின்தொடர்ந்து வந்தார்கள். இதனால் நான் தென்னாப்பிரிக்காவில் செய்த சேவையை இந்தியர்கள் அனைவரும் எவ்வாறு உணர்ந்திருக்கிறார்களென்பதை அறிந்து கொண்டேன்.

### என் சிக்கலான நிலைமை.

ஆனால் என் நிலைமை மிக்க சௌகரியமான தன்று. ஏனெனில் என்னை யாரும் அறிந்துகொள்ளாத இடத்தில் உதாரணமாக ரயில் பிரயாணம் முதலிய இடங்களில் கோடிக்கணக்கான இந்திய மக்கள் துன்புறுவது போலவே நானும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. எங்கே என்னை ஜனங்களெல்லாம் சூழ்ந்து கொண்டார்களோ அங்கே நான் அவர்களுடைய தரிசன ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டிய வனுகிப் பல கஷ்டங்களையடைந்தேன். இந்த இரண்டில் எது மிக்க கஷ்டமானதென்பதை அறியவும் முடியவில்லை. தரிசனம் காண வருவோர் குருட்டு பக்தியினால் வந்ததானால் சில சமயங்களில் கோபம் பிறந்ததுடன் மனதிலும் வருத்தப்பட்டதுண்டு. ஆனால் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்ததால் கோபம் வராமல் பொறுமையுடன் இருந்ததுமன்றி என்னையே பல வழிகளில் சீர்திருத்திற்று.

ஆனால் தெருக்களில் புறப்படும் போதும் பெரிய ஆர்ப்பாட்டத்தை உண்டாக்கக் கூடிய அவ்வளவு செல்வாக்கு எனக்கு அப்போது அதிருஷ்டவசமாக இல்லாதிருந்ததால் நான் அங்கு மிங்கும் சிறிது உலாவச் சௌகரியப்பட்டது. இவ்வாறு நான் சுற்றிய காலத்தில் யாத்திரீகர்களின் மறந்து விடும் சுபாவம், ஆடம்பரம் முதலியவை உண்மை பக்தியை விட அதிகமாக இருந்ததைக் கண்டேன். சாதுக்கள் என்ற கூட்டத்தார், வாழ்க்கையின் இனிய விஷயங்களையே அனுபவிக்கப் பிறந்தவர்களாகத் தோன்றிற்று.

### ஐந்து கால் பசுவின் விநோதம்.

அங்கே ஒரு பசு ஐந்து கால்களுடன் இருப்பதைக் கண்டேன். ஆச்சரியப்பட்டேன். ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் என் மயக்கத்தைத் தெளிவித்தார்கள். அப் பசு கொடியவர்களின் செய்கைக்குத் தியாக ரூபமாக விளங்குவதை அறிந்தேன். அப்பசுவின் ஐந்தாவது கால், ஒரு உயிருடன் இருந்த கன்றின் காலைத் துண்டித்துப் பசுவுக்கு ஒட்டப்பட்டதென்று அறிந்தேன். எல்லா ஹிந்துக்களும் இப்பசுவுக்காக தானம் செய்தார்கள்.

கும்பமேள தினமும் வந்து விட்டது. அது ஒரு கொடிய தினமாக எனக்குத் தோன்றிற்று. நான் யாத்ரீகன் என்ற உணர்ச்சியுடன் ஹரித்துவாரம் செல்லவில்லை. எப்போதுமே பக்தியைத் தேடிக்கொண்டு நான் யாத்திரை ஸ்தலங்களுக்குச் சென்றதில்லை. ஆனால் அங்கு வந்திருந்ததாகக் கூறப்பட்ட பதினேழு லக்ஷம் ஜனங்களும் ஆஷாட பூதிகளாகவோ, வெறும் வேடிக்கை பார்க்கிறவர்களாகவோ இருக்கமுடியாது. எத்தனையோ

---

(இதன் தொடர்பு 6-ம் பக்கம் பார்க்க.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection